

நயினாதீவு வேளான்குலத் திலகரும் நயினை பாலஞான வையிரவர் கோவில், ஆரம்ப கர்த்தாவும், பரிபாலன சபை நிரந்தர தலைவரும், சிற்பக்கலை விற்பனருமாகிய உயர்திரு

## அமரர் வைத்திலிங்கம் கதிரேசு

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**03.07.2005**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



அன்பிற்கினிய எமதருமைத் தந்தையே

எங்களின் குடும்ப ஒளி விளக்கே

இன்பம் பல துறந்து இவ்வுலகு தன்னில்

நாம் உயர ஒளி கொடுத்தாய் இன்று

பாசம் வைத்த நாம் இங்கு பரிதவிக்கப்

பறந்தோடிச் சென்றாயோ?

பரமனவன்தாள்தேடி

உங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டும்
என்று

அம்பாளைப் பிரார்த்தித்து

தங்களது பாதக் கமலங்களில்

இம்மலரைக்


காணிக்கையாக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாசமுள்ள

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமர மாது திருமதி. வைத்திலிங்கம் கதிரேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# அமரர் திரு. வைத்திலிங்கம் கதிரேசு

அன்னை மடியில்
18-04-1917

ஆண்டவன் அடியில்
20-05-2005

## திதி வெண்பா

சீர் திகழும் பார்த்திப வருடம் வைகாசித் திங்கள்
பேர்புகழும் பூர்வபக்க தூவாதசியில் - பார்பேசும்
நயினைப் பதியுதித்த நல்லோன் கதிரேசு
நாகம்மை வர்ணபதம் சென்றடைந்தான்வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயனுள்ள பதிகங்கள்

**பதிக**
**எண்**

1. நரம்புத் தளர்ச்சி, வாதநோய், வலிப்பு நோய் நீக்குவது
2. சனிக்கிரக தோஷம் நீக்குவது
3. இடர்களையும் பதிகம் - துன்பம் நீக்கி இன்பம் அருளுவது
4. வழக்குகளில் வெற்றியும், விவசாயம், தொழில் - லாபம் பெருக்க உதவும் பதிகம்
5. பிரசவம் சுகமாக நடைபெற உதவும் பதிகம்
6. குளிர் காய்ச்சல் மற்றும் தீவினையால் வருவன் நீக்குவது
7. தடைப்பட்ட திருமணங்கள் (இருபாலார்க்கும்) நிறைவேற்றுவது
8. குழந்தை வேண்டுவோர் படிக்க வேண்டிய பதிகம்
9. வெப்ப நோய்கள் ஜுரம், அம்மை நீக்கும் பதிகம்
10. நவக்கிரக தோஷங்களை நீக்கும் பதிகம்
11. பணம் வேண்டுவோர் ஓதவேண்டிய பதிகம்.
12. சிவபுண்ணியம் பெறுதற்குதவும் பதிகம்
13. திருமணம், மணிவிழா மங்கள நிகழ்ச்சிக்குரிய பதிகம்
14. மனக்கவலை தீரவும், பிறவாநிலை எய்தவும் படிக்க வேண்டிய பதிகம்
15. எலும்பு முறிவு குணமடையவும் முற்பிறப்பு வினை ஒழியவும் உதவும் பதிகம்
16. எடுக்கின்ற வேலைகள் தடையின்றி முடிக்க உதவும் பதிகம்
17. தீராத வயிற்று வலியை போக்கும் பதிகம்
18. பிறவிப்பயனைத் தரவல்ல பதிகம்
19. சிவகதியை அளிப்பது
20. பாம்பு, தேள் முதலிய விஷம் நீக்கும் பதிகம்
21. என்றும் உணவு கிடைக்கச் செய்யும் பதிகம்
22. சுகப் பிரசவம் ஏற்பட உதவும் பதிகம்
23. எமதூதர்களை வரவிடாமல் தடுக்கும் பதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. கடவுளையே காட்டும் அரிய பதிகம்
25. உருத்திர மந்திரப் பதிகம் (ஸ்ரீ ருத்திரத் தாண்டவப் பதிகம்)
26. பணம் பெறுவதற்கு உதவும் பதிகம்
27. இழந்த கண் பார்வையை பெற உதவுவது
28. திருட்டுபோன பொருள்கள் கிடைக்க உதவும் பதிகம்
29. சொறி, படை, மேகம் முதலிய தோல் வியாதிகள் நீக்குவது
30. மனக்கவலையை ஒழித்து ஆனந்தம் அளிப்பது
31. விரோதிகளை அடக்க உதவும் பதிகம்
32. ஊமை, திக்குவாய் நீக்க உதவும் பதிகம்
33. மாணவர்கள் முதல் மதிப்பெண் பெற உதவுவது
34. தமிழ் வேதங்கள் யாவையும் ஓதிய பலனை நல்கும் பதிகம்

## கட்டுரைகள்

(1) தமிழ் வேதம்
(2) விபூதியின் மகிமை
(3) நித்திய அனுஷ்டான சைவ ஒழுக்கம்
(4) தமிழ்வேதங்களாகிய திருமுறைகள் ஓதும் முறை
(5) சிவாலய தரிசன விதிமுறைகள்
(6) வீடுகளில் தீபம் ஏற்றும் போதும், ஏற்றிய பிறகும் பாட வேண்டிய பாடல்கள்.

**தமிழ் வேதமாகிய திருமுறைகளினால் பெற முடியாத ஒன்றை வேறு எம்முறையிலும் பெறவே முடியாது.**

*எளிய அன்பர்கட்கும் புரியும் வகையில் பல பாடல்கள் பிரித்து அச்சிடப்பட்டுள்ளன. சீர், அசை, தளை ஆகியவற்றை மூல நூலிற்கண்டு கொள்ளலாம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# முன்னுரை

திருஞான சம்பந்தப் பெருமானார் வேத வேள்விகளைச் செய்யும் வைதிகக் கவுணியர் கோத்திரத்தில் தோன்றியவர். நான்மறை ஆறங்கம் பயின்ற வித்தகர். தாம் மறை பயின்றவர் ஆனாலும், சிவனடியைப் பரவச் செந்தமிழை, மறை இலங்கு தமிழை, தவம் மல்கு தமிழையே தேர்ந்தெடுத்து சிவப்பேறு பெற்றதாக திருவாய் மலர்ந்துள்ளதை அறியலாம்.

''அருமறை ஞானசம்பந்தன் அந்தண்
சிரபுர நகருறை சிவன் அடியைப்
பரவிய செந்தமிழ் பத்தும்''

(1-109-11)

மேலும், சம்பந்தர் காலத்தில் தமிழர்களும் ஆலயங்களில் அர்ச்சனை செய்யும் தொண்டில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று சம்பந்தரே மூன்றாம் திருமுறையில், திருவீழிமிழலைப் பதிகத்தில் அருளியுள்ளார். பாடல்

''செந்தமிழர் தெய்வமறை நாவர் செழு
நற்க லைதெரிந்த வரோடு
அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள்
செய்ய அமர்கின்ற அரனூர்''

செந்தமிழர் தமிழால் தானே அர்ச்சனை செய்து இருக்க வேண்டும். இத்தகைய செந்தமிழின் பயன் அறியாமல் அல்லவா இத்தனை காலமும் நாம் எதை எதையோ நாடிக் கொண்டிருந்தோம். நம்மையெல்லாம் ''செந்தமிழ்ப் பயன் அறிகிலா அந்தகர்'' (3-39-11) என்று சம்பந்தர் சாடுவதை உணர வேண்டும்.

இந்நூலில் பயனுள்ள பல செந்தமிழ்ப் பதிகங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

தமிழ் வேதங்களாகத் திகழும் தேவாரத் திருமுறைகளை மக்கள் தம் உயிருக்கும் மேலாக மதித்துப் போற்ற வேண்டும். இந்நூல் 34 பதிகங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பதிகத்தின் வரலாறும், நாம் அடையும் பலன்களும் எழுதப்பட்டுள்ளன. பண்முறையாகப் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் வேண்டுகோள் பதிகங்கள் மட்டுமல்லாமல், பல முக்கிய பாடல்களும் அச்சிடப்பட்டுள்ளன. தமிழ்வேதச் சிறப்பு, ஆலய தரிசன விதிமுறைகள், விபூதியின் மகிமை இப்படிப் பல கட்டுரைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

நம் வாழ்க்கைக்குத் தேவையான எல்லாவற்றையும் பெறவும், மறுமைக்கு வேண்டியதையும் பெறவும் பதிகங்கள் அச்சிடப்பட்டுள்ளன. பிற்சேர்க்கையாக, விளக்கை ஏற்றும் போது பாடவேண்டிய பாடலும், ஏற்றிய பிறகு பாடவேண்டிய பாடல், மாணவர் தேர்வில் முதல் மதிப்பெண் பெற உதவும் சகலகலாவல்லி பாடல்கள் அச்சிடப்பட்டுள்ளன. கடைசியாக எல்லா வேதங்களையும் ஓதிய பலனை நல்கும் 'திருஎழு கூற்றிருக்கை' சேர்க்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சைவ அன்பர்களிடமும் இருக்க வேண்டிய ஒரு நூல், குறைகள் இருப்பின் மன்னித்தருளும்படி வேண்டி, யான் வணங்கும் அண்ணாமலை எம் அண்ணலைப் பிரார்த்தித்து அமைகிறேன். வாழ்க சிவனடியார்கள்! விளங்குக மேன்மைகொள் சைவநீதி!

நன்றி!

# தமிழ் வேதம்

தமிழ்மொழி இனிமையுடையது என்பார்கள். தமிழ்மொழியின் சிறப்பே அதன் தெய்வீகத் தன்மையில் தான் அமைந்துள்ளது எனலாம். தமிழால் வைதாலே போதும், இறைவன் நம்மை நலமுடன் வாழவைப்பான் என்பார் அருணகிரிநாதப் பெருமான். எனில், தமிழால் வாழ்த்தினால் கிடைக்கும் பயன்களை அளவிட முடியுமா? அப்படி அளவிட முடியாப் பயன்களைத் தருவன தமிழ் வேதங்களாகத் திகழும் பன்னிரு திருமுறைகள்.

தமிழ் மக்களின் மாதவப் பயனால் இறைவனே அடியார்கள் மூலமாக அருளியவையே இப்பன்னிரு திருமுறைகளும், இதை அப்பரடிகள் என்று பாராட்டப்படும் திருநாவுக்கரசு சுவாமிகள்.

> ''பத்திமையால் பணிந்து அடியேன் தன்னைப் பன்னாள்
> பாமாலை பாடப் பயில்வித்தானை''

என்று கூறுவதால் உய்த்துணரலாம். இறைவர் திருநாவுக்கரசு சுவாமிகளைச் சூலைநோய் கொடுத்து ஆட்கொண்டு தமிழ்வேதப் பாக்களைப் பாடும்படிச் செய்தார்.

மூன்று வயதில் திருஞானசம்பந்தர் பாடினார் எனில், இறையருள் அல்லவா பாடும்படி செய்தது. சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு அடியெடுத்துக் கொடுத்தும், பொன்முடிப்புத் தந்தும், வீடுதோறும் இரந்து உணவளித்தும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதுசென்றும் தமிழில் பாடும்படிச் செய்தது தெய்வத் திருவருள்தானே!

மணிவாசகப் பெருமானுக்கு குருவாய் வந்து உபதேசத்தை அளித்து, அதன் மூலம் உண்மையை உணர்த்தி 'திருவாசகம்' பாடும்படிச் செய்ததும், அப்பாடல்களை தாமே கேட்டருளியதும் இறைவனே அல்லவா?

சேரமான் பெருமான் கயிலாயத்தில் அருளிய 'திருக்கயிலாய ஞான உலா' இம்மண்ணுலகிற்குக் கிடைக்கும்படிச் செய்ததும் முழுமுதற் பொருளே அல்லவா?

'உலகெலாம்' என்று அடியெடுத்து உதவி சேக்கிழார் பெருமானைப் பெரியபுராணம் பாடும்படிச் செய்ததும் சிவபெருமானே ஆகும்.

இப்படி சிவபெருமானே தகுதியுடைய அருளாளர்கள் மூலமாக அருளியவையே தமிழ் வேதங்களாகத் திகழும் பன்னிரு திருமுறைகளும்.

பொன், கண், பொருள், கல்வி முதலியவைகள் பெறுவதற்கும், பிணிகள் தீரவும், குடும்பத்தில் வரும் எல்லாவிதமான இடர்களும் நீங்கவும், சுகமாக பிரசவிக்கவும், திருமணம் நடைபெறவும், பகைமை தீரவும், ஆன்மலாபம் அடையவும், வியாபாரத்தில் நன்மை அடையவும், நவக்கிரக தோஷங்கள் நீங்கவும், மனதில் நிம்மதி தோன்றவும், தீவினைகள் அகன்று நல்வினையைப் பெறவும், இயமன் அணுகாமலிருக்கவும், இம்மையில் எல்லாவித நலன்களையும் பெறுவதற்கும் அம்மையே சிவலோகம் ஆள்வதற்கும் திருமுறைகளுள் பதிகங்கள் அருளப்பட்டுள்ளன.

எல்லாவற்றுக்கும் மேலாக நாம் எடுத்த இந்த மானுடப் பிறவியின் பயனை அடைவதற்கு, (அவகதி வராமல் 'சிவகதி' அடைவதற்கு) ஸ்ரீருத்திர மந்திரமாக விளங்கும் அப்பரின் 'நின்ற திருத்தாண்டகம்' உள்ளது. மழை வேண்டுமா, பதிகம் உள்ளது. இப்படி உலக மக்கள் வேண்டுவனவற்றையெல்லாம் அளிப்பதற்கு இறைவனால் அருளப்பட்ட இத்திருமுறைகள் தமிழ் வேதங்கள் தானே!

இத்தகைய தமிழ் வேதங்கள் உலகில் விளங்கிடவும், விளங்கி அனைவரும் அனைத்து நன்மைகளையும் பெற்றிடவும் உதவி செய்யும்.

**எல்லோரும் நலமுடன் வாழ்வார்களாக.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபூதியின் மகிமை

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே.

## பல பெயர்கள்

விபூதி என்பதற்கு மேலான ஐசுவரியம் (செல்வம்) என்று பொருள் வி - மேலான, பூதி - ஐசுவரியம். இங்கு மேலான ஐசுவரியம் என்பது முக்திப் பேற்றையே குறிப்பிடும்.

எனவே, அனைத்திற்கும் மேலான முக்தியை அளிக்கவல்லது ஆதலால் இது விபூதி எனப்பட்டது. விபூதி, நீறு (பஸ்மம் பற்பம்), பசிதம், சாரம், ரக்ஷை என்ற பல பெயர்கள் திருநீற்றுக்கு உண்டு.

பாவங்களை எல்லாம் அழித்து நீறாக்குவதனால் நீறு பஸ்மம், பற்பம் என்று விபூதி சொல்லப்படுகிறது.

அறியாமை அழியும்படி சிவ ஞானமாகிய சிவதத்துவத்தை விளக்குவதனால் இதற்குப் பசிதம் என்று பெயர். உயிர்களின் மலத்தை நீக்குவதனால் சாரம் என்று பெயர். ஆன்மாக்களைத் துன்பங்களிலிருந்து காப்பதனால் ரக்ஷை (காப்பு) என்று பெயர்.

முறைப்படி மந்திரங்கள் உச்சரித்துப் பசுவின் சாணத்தை எரித்துத் திருநீறு தயாரிக்கப்படுகிறது.

## விபூதி தோன்றிய விதம்

ஆணவ மலத்தை நீக்கி அருளும் வேதியர் சிவபெருமான் அவர் திருவருளாகிய உமாதேவியார் பத்தினியாகவும், பிரளய வெள்ளத்தையே நீராகவும், அண்டங்களையே மண்டபங்களாகவும், பூவுலகமே வேதிகையாகவும், அரி, பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் அவியாகவும், ஏனைய உயிர்களை பசுக்களாகவும் கொண்டு, தமது நெற்றியாகிய குண்டத்தில் அக்கினிக் கண்ணில் அக்கினியை மூட்டி யாகம் செய்தருளினார். அந்த யாகத்தில் தோன்றிய வெண்நீற்றைத் தமது திருமேனியில் பரவப் பூசி விளங்கினார். இந்தத் திருநீற்று அகங்காரம், மமகாரம் எனப்படும். அகப்புறப் பற்றுக்கள் அழியும்படி மூவகை ஆன்மாக்களான விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் முதலியோரைத் தத்தம் சரீரத்தில் சிவபெருமான் தரிக்கச் செய்தார் என்று தணிகைப் புராணம் குறிப்பிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபூதி வகை

திருநீறு நான்கு வகைப்படும். அவை முறையே கற்பம், அநுகற்பம், உபகற்பம், அகற்பம் எனப்படும்.

வியாதியில்லாத கன்றுடன் கூடிய பசுவின் சாணத்தைப் பூமியில் விழாமல் தாமரையிலையில் ஏற்றுப் பால், தயிர், நெய், கோமயம் ஆகியவற்றைச் சேர்த்து மந்திரங்களைச் சொல்லி சிவாக்கினியில் எரித்து எடுப்பது கற்பக விபூதி எனப்படும்.

காடுகளில் கிடைக்கும் பசுஞ்சாணங்களைச் சேகரித்து மந்திரங்களைக் கூறிச் சிவாக்கினியில் தகிர்த்து தயாரிப்பது அநுகற்ப விபூதி எனப்படும்.

மாட்டுத் தொழுவங்களிலும், மாடுகள் இருக்கும் இடங்களிலும் கிடைக்கும் சாணத்தைக் காட்டுத்தீயில் எரித்து மீண்டும் அதைச் சிவாக்கினியில் எரித்து எடுப்பது உபகற்ப விபூதி எனப்படும்.

மந்திரம் இல்லாமல் எல்லோராலும் சேகரிக்கப்பட்ட சாணத்தைச் சுள்ளிகளினால் எரித்து எடுப்பது அகற்ப விபூதி எனப்படும்.

## விபூதி வைக்கும் விதி

மேலே சொல்லப்பட்ட நான்கு வகையான விபூதிகளைப் பரிசுத்தமான வஸ்திரத்தில் வஸ்திரகாயம் செய்து, புதுப்பாண்டத்தில் வைத்து, விபூதி காயத்திரி மந்திரத்தை உச்சரித்து அதனுள் மல்லிகை, முல்லை, பாதிரி, சிறுசண்பகம், துளசி, கதிப்பச்சை ஆகிய மலர்களைக் கலந்து, சத்யோஜாத மந்திரங்களைக் கூறி வைக்க வேண்டும்.

## விபூதி தாரண வகை

ஸ்நானம், திரிபுண்டரம், உத்தூளனம் என்ற மூன்று விதங்களில் விபூதி தரிக்கப்படுகிறது.

உடல் முழுவதும் விபூதி பூசிக்கொள்வது விபூதி ஸ்நானம் ஆகும். தண்ணீரில் குளிக்க முடியாத போதும், தண்ணீரில் குற்றம் நேர்ந்த காலத்திலும் விபூதி ஸ்நானம் மேற்கொள்ளப்படும். இதை 'ஆக்நேயம் பஸ்மஸ்நானம்' என்று வேதம் கூறுகிறது.

விபூதியை மூன்று குறியாகத் தரிப்பது திரிபுண்டரம் என்று சொல்லப்படுகிறது. திரி - மூன்று, புண்டரம் - குறி.

நீரில் குழைக்காமல் அணிவது உத்தூளனம் எனப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபூதி அணியும் அளவும் இடங்களும்

நெற்றியில் கடைப்புருவ எல்லை நீளமும், மார்பிலும், புஜங்களிலும் ஆறங்குல நீளமும், மற்ற இடங்களில் ஒவ்வோர் அங்குல நீளமும் விபூதியைத் தரிக்க வேண்டும். விபூதிக் கோடுகள் ஒன்றை ஒன்று தீண்டினாலும், மிகவும் அகன்று இருந்தாலும், வளைந்திருந்தாலும், இடைவெளி இல்லாமலிருந்தாலும் குற்றமாகக் கருதப்படும். விதிக்கப்பட்ட அளவுக்கு விபூதியின் கோடுகள் குறைந்தால் ஆயுள் குறையும் என்றும், கூடினால் தவம் கெடும் என்றும் சொல்லப்படுகிறது. மூன்று குறிகளின் இடைவெளி ஒவ்வோர் அங்குலம் அளவு கொண்டதாக இருக்க வேண்டும்.

உச்சி, நெற்றி, கழுத்து, மார்பு, நாபி, முழந்தாள்கள் இரண்டு, தோள்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு ஆகிய பதினாறு இடங்களில் விபூதியைத் தரிக்க வேண்டும் என்று ஆன்றோர் விதித்துள்ளனர். விலாப்புறம் இரண்டை நீக்கிச் செவிகள் இரண்டையும் விபூதியைத் தரிக்கும் இடங்களாகச் சேர்த்துக் கொள்வதும் உண்டு. மேலும், பன்னிரண்டு, எட்டு இடங்களில் விபூதியைத் தரிக்க வேண்டும் என்று சொல்வது உண்டு.

## விபூதி வாங்கும் விதி

ஆசாரியர் அல்லது சிவனடியார் விபூதி கொடுக்கும்போது அவர்களை விழுந்து வணங்கி எழுந்து கைகூப்பி இரண்டு கைகளாலும் விபூதியை வாங்கி அணிய வேண்டும். அதன் பின்பு விபூதி கொடுத்தவரை முன்பு போலவே மீண்டும் எழுந்து வணங்குவது முறை. குதிரை, சிவிகை, ஆசனம், அம்பலம், திண்ணை முதலியவற்றில் இருந்து கொண்டு விபூதியை வாங்குவது கூடாது. விபூதி கொடுப்பவர் கீழே நிற்க, வாங்குபவர் மேலிருந்தும் வாங்குவது கூடாது. சிவபக்தி இல்லாதவர்களிடமும் திருநீற்றை வாங்கக் கூடாது.

## தரிக்கக் கூடாதவை

ஒரு கையால் வாங்கிய விபூதி, சிவதீட்சை பெறாதவர் கொடுத்த விபூதி, கருநிறம், செந்நிறம், புகைநிறம், பொன்நிறம் உடைய விபூதிகள் ஆகியவற்றைத் தரிப்பது கூடாது.

## உட்கொள்ளும் மருந்து

மருந்தாகவும் உட்கொள்ளும் மேன்மை விபூதிக்கு உண்டு. உட்கொள்ளும் விபூதி தேக அசுத்தங்களைப் போக்கி, 72,000 நாடிகளுக்கு வலிமையை உண்டாக்குகிறது என்று பெரியோர் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அனுஷ்டான சைவ ஒழுக்கம்

மனிதர்களாகப் பிறந்த நாம் தெய்வ நிலையை அடைய வேண்டும். நம் உள்ளே புதைந்து கிடக்கும் தெய்வீக ஆற்றலை வெளிப்படுத்த உதவுவது இறைவழிபாடே ஆகும்.

மனிதன் மரண யாத்திரை அடையும் போது பொன், பொருள், நிலம், வீடு, மனைவி, மக்கள் யாவும் உடன் வராது. உடன் வருவன புண்ணியம் பாவம் மட்டுமே. உணவினால் உடம்பு வளரும். உள்ளம் அறநெறிகளால் தான் வளரும். வெள்ளம் உயர்ந்தால் மலர் உயரும். உள்ளம் உயர்ந்தால் மனிதன் உயர்வான். உள்ளம் உயருவதற்கு தினமும் இறைவழிபாடு (மூன்று வேளை) அவசியமாகிறது.

யுகங்கள் நான்கு. அவை 1. கிருதயுகம் 2. திரேதாயுகம் 3. துவாபரயுகம் 4. கலியுகம் என்பன

கிருத யுகத்தில் ஞானத்தினால் முத்தி.
திரேதா யுகத்தில் தானத்தினால் முத்தி.
துவாபர யுகத்தில் யாகத்தினால் முத்தி.
கலியுகத்தில் பக்தியினால் முத்தி.

பக்தி என்பது வெறும் அனுஷ்டானம், ஆசாரம், ஆலய வழிபாடு, விழா எடுத்தல், பாக்களை மனனம் செய்தல் என்பன மட்டுமே ஆகிவிடாது, மனதைத் தூய்மை ஆக்குவதே பக்தியாகும். மனிதனைப் பண்புள்ளவனாக்குவதே பக்தியாகும். சுயநலமின்றி எவன் பிறருக்கென வாழ்கிறானோ அவனே ஆன்மீக ஞானம் பெற்று சிவத்தை அடைகிறான். நாம் உடம்பு எடுத்ததன் பயன் பிற உயிர்கட்கு இதம் செய்து தெய்வத்தை அடைவதற்கேயாம். இத்தகைய உண்மை நிலையை அடைவதற்கு நாம் தினமும் சில நடைமுறைகளைக் கடைப்பிடித்தாக வேண்டும். இல்லை எனில் நமக்கும் மிருகங்கட்கும் வேறுபாடில்லாமல் போய்விடும்.

உலகில் மக்களாய் பிறந்தார் அனைவரும் விடியற் காலை நான்கு மணிக்கே எழுதல் வேண்டும். அப்படி எழும் பொழுதே (அவரவர்களின் இஷ்ட தெய்வத்தை எண்ணித் துதிக்க வேண்டும்) சைவ அன்பர்கள் ''சிவசிவ'' என்று சொல்லிக்கொண்டே எழுதல் வேண்டும். இதையே சுந்தரமூர்த்தி சுவாமிகள் ''காலையெழுந்து தொழுவார் தங்கள் கவலை களைவாய் கறைக் கண்டா'' என்றும், அப்பரடிகள், ''திருவடியே உள்கி நினைந்தெழுவார் உள்ளம் ஏயவன்காண்'' என்றும் அருளியிருப்பதனாலும் தெள்ளிதின் உணரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு நீர் கொண்டு முகம், கை, கால், சுத்தம் செய்தல் வேண்டும். இதன்பின் கிழக்கு அல்லது வடக்கு முகமாக அமர்ந்து ''சிவாய நம'' என்று திருநீற்றினை நெற்றியில் அணிதல் வேண்டும். முதற்கண்,

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

**என விநாயகப் பெருமானைத் துதித்திடல் வேண்டும்.**

**பின் சிவபெருமானை நினைத்து**

படைக்கலமாக உன் நாமத் தெழுத்தஞ்சென் நாவிற்கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் ஏழுபிறப்பும் உனக்காட் செய்கின்றேன்.
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கி தூநீறணிந்துன்
அடைக்கலம் கண்டாய் அணி தில்லைச் சிற்றம்பலத்தரனே.

**எனத் துதித்திடல் வேண்டும். பின் அம்மையாரை நினைத்து,**

பரந்தெழுந்த சமண் முதலாம் பரசமய இருள் நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளி விளங்க
அரந்தை கெடப் புகலியர் கோன் அமுது செயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரி பூங்கழல் போற்றி

**எனத் துதித்துப் பின் முருகப் பெருமானை நினைத்து,**

முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

**எனத் துதித்துப் பின் நந்தியெம் பெருமானை நினைத்து,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கணன் கயிலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நம்குரு மரபிற்கெல்லாம் முதற்குரு நாதன் ஆகிப்
பங்கயத் துளவம் நாறும் வேத்திரப் படைபொறுத்த
செங்கையெம் பெருமான் நந்தி சீரடிக் கமலம் போற்றி

**எனத் துதித்துப்பின் சைவ சமயாச்சாரியர்களை நினைந்து**

பூமியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடி போற்றி
வாழிதிருநாவலூர் வன் தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி!

**எனத்துதித்துப் பின்**

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

என வாழ்த்தித் திருநீறு அணிந்து வெளிவருக. வீட்டில் உள்ள தாய் தந்தையரை வணங்க வேண்டும். இதனால் நாம் அடையும் பலன் அளவிடற்கரியது. பத்து புனிதத் தீர்த்தங்களில் குளித்த புண்ணியம் பெறலாம்.

இதன்பிறகு பஞ்சாட்சரம் (ஓம் சிவாய நம) செபித்துக் கொண்டே குளிக்க வேண்டும். இவ்வாறு குளிக்கத் துவங்கும் பொழுதே இறைவனை நினைந்து, அறிந்தோ, அறியாமலோ செய்த பாவங்களை எல்லாம் போக்கி ஆட்கொள்ளல் வேண்டும் என்று மனதால் வேண்டிக்கொண்டு குளிக்க வேண்டும்.

பூசைக்கு உரிய பாத்திரத்தில் நீரை எடுத்துக்கொண்டு பூசை அறையை அடைந்து, ஐந்தெழுத்து சொல்லி நீர் தெளித்து, தெளித்த இடத்தில் நீர் பாத்திரத்தை வைக்க வேண்டும். பின் வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் அமர வேண்டும். குருவை, அம்பிகையோடு கூடிய சிவ பெருமானை நினைக்க வேண்டும். திருநீற்றை ஜலத்துடன் கூட்டாது உத்தூளனமாக ஐந்தெழுத்து சொல்லித் தலை, நெற்றி, மார்பு, இரு தோள்கள் ஆகிய இடங்களில் பூசுதல் வேண்டும். பிறகு நீருடன் கூட்டிக் குழைத்து பஞ்சாட்சர மந்திரம் (ஓம் சிவாய நம) சொல்லியேனும் அல்லது திருநீற்றுப் பதிகம் சொல்லியேனும், தலை, நெற்றி, மார்பு, தொப்பூழ்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு முழந்தாள்கள், இரண்டு தோள்கள், இரு முழங்கை, இரு மணிக்கட்டு, இரு விலாப்புறம், முதுகு, கழுத்து ஆகிய பதினாறு இடங்களில் இடவேண்டும். பின் 'சிவாயநம' என்று சொல்லி உருத்திராக்கம் அணிக. (உடம்பில் ஒரு உருத்திராக்கம் எப்பொழுதும் இருக்கலாம். பூசைக்காலத்தில் மாலையாக அணிதல் நலம்)

பிறகு தம்தம் குருமூர்த்திகள் அறிவித்தபடி அனுஷ்டானஞ் செய்தல் வேண்டும். பிறகு பஞ்சாட்சர ஜபம் செய்தல் வேண்டும். செய்யும்போது சிவபெருமானை அம்பிகையோடு ஓரிடத்தில் நிறுத்தி (இதயம் அல்லது புருவமத்தி) மற்றை எண்ணங்களை அறவே மறந்து மந்திரத்தை ஜபித்தல் வேண்டும். பிறகு வீட்டில் உள்ள கடவுளர்களைப் பூசித்தல், தரிசித்தல், தோத்தரித்தல் முதலியன செய்தல் வேண்டும்.

(தோத்திரம் செய்யும்பொழுது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் முதலியவற்றிலிருந்து பாக்களை ஓதுதல் நலம்)

இதன்பிறகு அருகில் உள்ள சிவாலயத்திற்கு புஷ்ப கைங்கர்யம் செய்யலாம். ஆலய தரிசனமும் செய்யலாம். இதை முடித்து அவரவர் தொழில் முறையைக் கவனித்தல் வேண்டும்.

மாலையில் முன்பு சொன்னதுபோலவே கால், முகம் சுத்தம் செய்து திருநீற்றினை உத்தூளனமாகவும், நீருடன் குழைத்தும் அணிந்து ஐந்தெழுத்து ஓதுதல், தோத்திரம் செய்தல், பின் ஆலய தரிசனம் செய்தல் அவசியமாகும். தினமும் ஆலயம் செல்ல இயலாதவர்கள், சில காலம் குறித்துக் கொண்டு அக்காலங்களில் தவறாது சென்று தரிசித்தல் வேண்டும்.

பிறகு இறைவனை நினைந்து இரவு சாப்பாடு அருந்துதல் வேண்டும். இரவு சாப்பாட்டிற்குப் பிறகு சிறிது உலாவுதல் வேண்டும். உறங்கச் செல்லுமுன் 108 முறை பஞ்சாட்சரத்தை ஜபித்துவிட்டு சிவசிந்தனையுடன் உறங்க வேண்டும்.

இதுகாறும் கூறியவை சைவ சமய ஆண்களும், பெண்களும் பின்பற்ற வேண்டிய ஒழுக்கமாகும். அப்பொழுது தான் வாழ்வு வளமுற்றதாக அமையும். பிறந்த பயனை அடையவும், துன்பங்கள் நீங்கி இன்பம் பெறவும் ஏதுவாகும். வாழ்க வளமுடன்.

**திருச்சிற்றம்பலம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைகள் ஓதும் (பாராயணம்) முறை

காலையில் ஐந்துமணிக்கெல்லாம் துயிலெழுந்து நீராடி, திருநீறணிந்து, உருத்திராட்சம் (இருப்பின்) அணிந்து பூசை அறையில் கிழக்கு அல்லது வடக்கு திசை நோக்கி அமர வேண்டும்.

முதலில் மனதை ஒருமுகப்படுத்த வேண்டும். பிறகு விநாயகப் பெருமானைத் துதிக்க வேண்டும். இதனை அடுத்து நால்வர் துதிப் பாடல்களைப் பாடவேண்டும். அதன் பின்னரே, அவரவர்கள் விரும்பும் பதிகங்களை பக்திச் சிரத்தையுடன் ஒரு மண்டலம் (48 நாட்கள்) ஓதுதல் வேண்டும். ''பக்திமையாலே பாடியும் ஆடியும் பயிலவல்லோர்கள். விண்ணவர் விமானம் கொடுவர ஏறி வானுலகாண்டு வீற்றிருப்பவர் தாமே" என்பது திருஞான சம்பந்தப் பெருமானார் வாக்காகும்.

திருமுறைப் பதிகங்களை ஓதிப் பெறமுடியாத செல்வம் உலகில் இல்லை. இது சத்தியமாகும். இதை அவரவர்களே அனுபவித்து உணரலாம்.

பதிகங்களைத் துவங்குவதற்கு முன்பாகவும் முடிந்த பின்னரும் ''திருச்சிற்றம்பலம்'' என்று கூறுதல் வேண்டும்.

**''சிவமே நமக்குப் பொருள்''**

திருச்சிற்றம்பலம்.

# சிவாலய தரிசன விதிமுறை :

1. ஆலய தரிசனம் செய்வோர் நீராடி, தூய உடை அணிந்து திருநீறு உருத்திராக்கம் போன்றவை அணிந்து கொண்டு செல்ல வேண்டும்.
2. வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், மலர்கள் முதலிய வழிபாட்டுப் பொருள்களைக் கொண்டு போகலாம்.
3. முதலில் ஆலய கோபுரத்தை வணங்க வேண்டும்.
4. உள்ளே சென்று, கொடி மரத்தின் முன்னே, ஆண்கள் தலை, மோவாய், இரு கைகள், இரு புயங்கள், முழந்தாளிரண்டு ஆகிய எட்டும் நிலத்தில் படுமாறு அஷ்டாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள், தலை, இரு கைகள், இரு முழங்கால்கள் ஆகிய ஐந்தும் நிலத்தில் படுமாறு பஞ்சாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும்.

5. கொடி மரத்தின் எதிரில் வணங்கிய பின் நந்தி தேவரிடம் விடைபெற வேண்டும். (மானசீகமாக விடைபெறுதல் மிக அவசியம்)

6. நந்தி தேவரிடம் விடை பெற்றுக்கொண்ட பிறகு விநாயகரை ஒரு முறையும், சிவபெருமானை ஐந்து முறையும், அம்பாளை நான்கு முறையும், நவக்கிரகங்களை ஒன்பது முறையும், வலம் வந்து வணங்க வேண்டும்.

7. சமயாச்சாரியர்கள், நடராசப்பெருமான், பிற தெய்வங்கள் யாவற்றையும் வணங்கிவிட்டு, இறுதியாக சண்டேசுவர நாயனாரை அடைந்து, மும்முறை கைகளால் தாளமிட்டு, சிவதரிசனப் பலனைத் தந்தருளும்படி வேண்டுதல் அவசியமாகும்.

8. சண்டேசுவர நாயனாரிடம் சிவதரிசனப் பலனைப் பெற்ற பிறகு, கொடி மரத்தின் அருகில் வடக்கு முகமாக அமர்ந்து திரு ஐந்தெழுத்தை (ஓம் சிவாய நம) 108 முறை தியானித்தல் வேண்டும்.

9. இறுதியாக, வைரவரை வணங்கி சிவச்சொத்து எதையும் எடுத்துச் செல்லவில்லை என்று உறுதி கூறி கோயிலை விட்டு வெளியே வருதல் வேண்டும்.

அன்றாடம் திருக்கோயில் செல்ல முடியாதவர்கள், குறிப்பிட்ட புண்ணிய நாட்களிலாவது அவசியம் சென்று வணங்க வேண்டும். கட்டாயமாக, சிவத்தல யாத்திரைகளை மேற்கொள்ள வேண்டும்.

இப்படி சிவபுண்ணியம் பெற விரும்பும் சைவப் பெருமக்கள், ஆலய தரிசனத்துடன் நின்றுவிடக் கூடாது. எல்லாவித வழிபாட்டின் சாரமாவது, தூய உள்ளத்துடன் பிறருக்கு நன்மை செய்வதே ஆகும். ஏழை எளிய மக்கள், நோயுற்றவர்கள், ஆகியவர்களிடம் கடவுளைக் கண்டு அவர்கட்குச் சேவை செய்து உதவி செய்கின்றவர்கள் தான் சிவபெருமானின் இன்னருளுக்குப் பாத்திரமாகிறார்கள். சிவபெருமானுக்குச் சேவை செய்ய விரும்புகிறவர்கள். அவருடைய படைப்புக்களாகிய உலகில் உள்ள எல்லா ஜீவராசிகட்கும் சேவை செய்ய முற்படவேண்டும்.

சுயநலமின்மையே உண்மையான சமயப் பற்றுக்குச் சான்றாகும். ஒருவன் எவ்வளவுக்குத் தன்னலமின்றிப் பிறருக்கென வாழ்கிறானோ, அந்த அளவிற்கு அவன் ஆத்ம ஞானம் பெற்றுச் சிவபெருமான் அருகே இருக்கும் அருகதையுள்ளவனாகிறான்.

அப்படியின்றி, சுயநலமிக்க ஒருவன், எல்லா ஆலயங்கட்கும் சென்று அபிடேகம், ஆராதனை செய்திருப்பினும், சிறுத்தைபோல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடம்பெல்லாம் திருநீறு பூசியிருப்பினும், அவன் சிவபெருமானை விட்டு வெகுதூரம் விலகியுள்ளவனே ஆகிறான் என்பது விவேகானந்த சுவாமிகளின் அருள்வாக்காகும்.

எனவே கடவுளை வணங்கும் நாம் அனைவரும் மிகுந்த கருணை உடையவர்களாக இருத்தல் வேண்டும். கருணையால் மட்டுமே கருணாகரக் கடவுளை அடையலாம் அல்லது வேறு வழி இல்லை.

**சிவா. திருச்சிற்றம்பலம்.**

# வீடுகளில் விளக்கேற்றும்போது பாடவேண்டிய அற்புதப் பாடல்

திருவிளக்கினை இலட்சுமியின் அம்சமாகக் கருதுவது நமது இயல்பாகும். 'அருளது சக்தியாகும் அரன் தனக்கு' இறைவருடைய அருளே சக்தி எனப் போற்றப்படுகிறது. அத்தகைய இறையருளை அம்பாளை தீபத்தில் அமரச்செய்து நலம் பெறுதல் பொருட்டே வீடுகளில் காலையும் மாலையும் விளக்கேற்றப்படுகிறது. 'ஆவாஹனம்' எனும் சொல்லுக்கே 'அழைத்தல்' என்று தான்பொருள். எங்கும் நிறைந்திருக்கும் இறையருளை - சக்தியை - லட்சுமி தேவியை, நாம் ஏற்றும் தீபத்தில் அமர்ந்து அருள் புரியும்படி செய்ய வேண்டும்.

கீழே காணும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் பாடலை பாடியவாறே தீபத்தை ஏற்ற வேண்டும். இப்பாடலை அருளியவர் குமர குருபர சுவாமிகள் ஆவர். இவர் மதுரையில் அரங்கேற்றம் செய்யும்போது, மீனாட்சியம்மையே இப்பாடலுக்கு மகிழ்ந்து, குழந்தையாக வந்து, முத்து மாலையை அருளி மறைந்தாள் என்பது உண்மை வரலாறு ஆகும். நாம் செய்த புண்ணியம் நமக்கு இப்பாடல்கள் கிடைத்துள்ளன. இப்பாடல் இன்றி தீபம் ஏற்றுவது மணம் இல்லா மலர் போல என உணர்க.

**பாடல்:-**

பெருந்தே னிறைக்கும் நறைக் கூந்தற்
    பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறை மௌலிப்
    பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தே வருக வித்தின்றி
விளைந்த பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள் பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக்கிளியே வருகவே
மலையத்துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே.

இப்பாடலைப் பாடிய வண்ணம் விளக்கை ஏற்றினால் அம்பாள் (ஆவாஹனம்) ஒளியில் விளங்கியிருப்பாள். விருந்தினரை அழைத்த பிறகு உபசாரம் செய்ய வேண்டியது நம்முடைய தலையாய கடமையாகும். பின்வரும் திருவாசகப் பாடலைப் பாடி அம்பாளை திருப்திப்படுத்த வேண்டும்.

**விளக்கு ஏற்றிய பிறகு பாடவேண்டிய திருவாசகப் பாடல் :**

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீறாய்
பங்கயத்து அயனும் மாலறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்த மேவியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

இப்படிச் செய்வதால், வீடுகளில் செல்வம் நிறைந்து இன்பமாக வாழலாம். மங்களமே நடக்கும், வீடுகளில் இலட்சுமி வாசம் செய்வாள்.

**திருச்சிற்றம்பலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

### நால்வர் துதி

பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன் தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

# திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

## முதல் திருமுறை

**திருப்பிரமபுரம்** **பண் : நட்டபாடை**

தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்பான் இவனன்றே.

அருநெறிய மறை வல்ல முனியகன் பொய்கை அலர்மேய
பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மான் இவன் தன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரை செய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே.

**திருவலிதாயம்** **பண் : நட்டபாடை**

பத்தரோடு பலரும் பொலியம்மலர் அங்கைப் புனல் தூவி
ஒத்த சொல்லி உலகத்தவர்தாந் தொழுதேத்த உயர் சென்னி
மத்தம்வைத்த பெருமான் பிரியாதுறைகின்றவலி தாயம்
சித்தம் வைத்த அடியாரவர் மேலடையா மற்றிடர் நோயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டு வைகும் மணமல்கிய சோலை வளரும் வலிதாயத்து
அண்டவானன் அடியுள்குதலால் அருள் மாலைத் தமிழாகக்
கண்டல்வைகு கடற்காழியுள் ஞானசம்பந்தன் தமிழ் பத்தும்
கொண்டு வைகியிசை பாடவல்லார் குளிர் வானத்துயர் வாரே.

**ஆவூர்ப்பசுபதீச்சுரம்** **பண் : நட்டபாடை**

குற்றமறுத்தார் குணத்திலுள்ளார் கும்பிடுவார்தமக்கு
அன்பு செய்வார்
ஒற்றை விடையினர் நெற்றிக்கண்ணார் உறைபதியாகும்
செறிகொள்மாடம்
சுற்றிய வாசலின் மாதர்விழாச்சொற்கவி பாட நிதானம் நல்கப்
பற்றிய கையினர் வாழும் ஆவூர்ப்பசுபதியீச்சரம் பாடு நாவே

**திருவண்ணாமலை** **பண் : நட்டபாடை**

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே

வெம்புந்திய கதிரோன் ஒளி விலகும் விரிசாரல்
அம்புந்திமூ எயில் எய்தவன் அண்ணாமலை அதனை
கொம்புந்துவ குயில் ஆலுவ குளிர்காழியுள் ஞான
சம்பந்தன தமிழ் வல்லவர் அடிபேணுதல் தவமே.

**திருப்புன்கூர்** **பண் : தக்கராகம்**

முந்தி நின்ற வினைகள் அவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்தமில்லா அடிகள் அவர் போலும்
கந்த மல்கு கமழ்புன் சடையாரே
மாட மல்கு மதில் சூழ் காழிமன்
சேடர் செல்வர் உறையுந்திருப்புன்கூர்
நாடவல்ல ஞான சம்பந்தன்
பாடல் பத்தும் பரவி வாழ்மினே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிகம் 1

இப்பதிகத்தை 48 நாட்கள் ஓதினால் நரம்புத் தளர்ச்சி, வாதம், வலிப்பு முதலிய நோய்கள் குணமாகும்.

காழிப் பிள்ளையார் பல தலங்களையும் தரிசனம் செய்து கொண்டு மழநாட்டைச் சார்ந்த திருப்பாச்சிலாச்சிரமம் எனும் இத்தலத்திற்கு எழுந்தருளினார். ''கொல்லிமழவன்'' எனும் அன்னாட்டு மன்னனுடைய மகளுக்கு ''முயலகன்'' எனும் தீராத நோயிருந்தது. சம்பந்தப் பெருமான் வருவதை அறிந்த அரசன் அன்புடன் அவரை வரவேற்றுத் தன் மகளின் நோயை நீக்கியருள வேண்டினான். அருள் உள்ளம் கொண்ட சம்பந்தப் பெருமான் ''துணிவளர் திங்கள்'' எனும் இப்பதிகத்தைப் பாடி இறைவனை வணங்க நோய் கதுமென மறைந்து ஒழிந்தது.

இன்றும் பலர் முழு நம்பிக்கையுடன் இப்பதிகத்தை ஓதி மேலே கண்ட நோயிலிருந்து விடுபடுவது உண்மையே ஆகும்.

**திருச்சிற்றம்பலம்.**

**திருப்பாச்சிலாச்சிராமம்** **பண் : தக்கராகம்**

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலி தேர்வர்
அணிவளர் கோலமெலாஞ் செய்து பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே. 1

கலைபுனை மானுரி தோலுடையாடை
கனல் சுடரால் இவர் கண்கள்
தலையணி சென்னியர் தாரணிமார்பர்
தம் அடிகள் இவரென்ன
அலைபுனல் பூம்பொழில் சூழ்ந்தமர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
இலைபுனை வேலரோ ஏழையை வாட
இடர் செய்வதோ இவரீடே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஞ்சுடராடுவர் துஞ்சிருள் மாலை
வேண்டுவர் பூண்பது வெண்ணூல்
நஞ்சடை கண்டர் நெஞ்சிடமாக
நண்ணுவர் நம்மை நயந்து
மஞ்சடை மாளிகை சூழ்தரு பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி வாடச்
சிதை செய்வதோ இவர் சீரே. 3

கனமலர்க் கொன்றை அலங்கல் இலங்கக்
கனல்தரு தூமதிக் கண்ணி
புனமலர்மாலை அணிந்தழகாய
புனிதர் கொலாம் இவர் என்ன
வனமலி வண்பொழில் சூழ்தருபாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
மனமலி மைந்தரோ மங்கையைவாட
மயல் செய்வதோ இவர்மாண்பே. 4

மாந்தர் தம்பால் நறுநெய் மகிழ்ந்தாடி
வளர்சடை மேற்புனல் வைத்து
மோந்தை முழாக்குழல் தாளமோர் வீணை
முதிரவோர் வாய்மூரி பாடி
ஆந்தை விழிச்சிறு பூதத்தர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
சாந்தணி மார்பரோ தையலை வாடச்சதுர்
செய்வதோ இவர் சார்வே. 5

நீறுமெய்பூசி நிறைசடை தாழ
நெற்றிக் கண்ணாலுற்று நோக்கி
ஆறதுசூடி ஆடரவாட்டி
ஐவிரற் கோவண ஆடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாறரு மேனியர் பூதத்தர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
ஏறதுஏறியர் ஏழையை வாட
இடர் செய்வதோ இவரீடே. 6

பொங்கிள நாகம் ஓர் ஏகவடத்தோடு ஆமை
வெண்ணூல் புனைகொன்றை
கொங்கிளமாலை புனைந்தழகாய
குழகர் கொலாம் இவரென்ன
அங்கிள மங்கையோர் பங்கினர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
சங்கொளி வண்ணரோ தாழ்குழல் வாடச்
சதிர்செய்வதோ இவர் சார்வே. 7

ஏவலத்தால் விசயற்கருள் செய்து
இராவணனை யீடழித்து
மூவரிலும் முதலாய் நடு வாய
மூர்த்தியை யன்றி மொழியாள்
யாவர்களும் பரவும் மெழிற் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
தேவர்கள் தேவரோ சேயிழை வாடச்
சிதை செய்வதோ இவர் சேர்வே. 8

மேலது நான்முகன் எய்தியதில்லை
கீழது சேவடி தன்னை
நீலது வண்ணனும் எய்தியதில்லை
யென இவர் நின்றதுமல்லால்
ஆலதுமாமதி தோய் பொழிற் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
பாலது வண்ணரோ பைந்தொடி வாடப்
பழிசெய்வதோ இவர் பண்பே. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணொடு கூடிய சாயினரேனும்
நகுவரவர் இருபோதும்
ஊனொடு கூடியவுட்கு நகையாலுரை
களவை கொள வேண்டா
ஆணொடு பெண் வடிவாயினர் பாச்சி
லாச்சிராமத்துறைகின்ற
பூண் நெடு மார்பரோ பூங்கொடிவாடப்
புனை செய்வதோ இவர்பொற்பே 10

அகமலி அன்பொடு தொண்டர் வணங்க
ஆச்சிராமத் துறைகின்ற
புகைமலி மாலை புனைந்தழகாய
புனிதர் கொலாம் இவரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தரு
காழிநற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிவையேத்த
சாரகிலா வினை தானே. 11

(பதிகம் முற்றிற்று)

**திருச்சிற்றம்பலம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிகம் 2

திருநள்ளாறு பண் : பழந்தக்கராகம்

## சனிக்கிரகத்தால் வரும் எல்லாவித தோஷமும் போக்கி நலம் தரும் பதிகம்:-

சனிபகவானால் வரும் தோஷங்கள் நீங்க யாவரும் திருநள்ளாறு செல்வது தெரிந்ததே. சம்பந்தப் பெருமான் பாடியருளிய இப்பதிகம் அனல் வாதத்தின்போது வேகாமல் நின்ற ''பச்சைப் பதிகமாகும்''. இப்பதிகத்தை பாராயணம் செய்பவர்களும் வினையினால் (சனிக்கிரகத்தினால்) பாதிக்கப்படமாட்டார்கள் என்பது சொல்லாமல் விளங்கும்.

திருச்சிற்றம்பலம்

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின் மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 1

தோடுடைய காதுடையன் தோலுடையன் தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோடு ஏழ்கடலுஞ் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே. 2

ஆன்முறையா லாற்ற வெண்ணீறாடி அணியிழையோர்
பான் முறையால் வைத்தபாதம் பத்தர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவும் சூலமும் பற்றிய கை
நான் மறையான் நம்பெருமான் மேயது நள்ளாறே. 3

புல்கவல்ல வார்சடை மேற்பூம்புனல் பெய்தயலே!
மல்கவல்ல கொன்றை மாலை மதியோடுடன் சூடிப்
பல்கவல்ல தொண்டர் தம் பொற்பாத நிழற்சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுதாங்கி யூர்திபேணியேர்கொள் இளமதியம்
ஆறுதாங்குஞ் சென்னிமேலோர் ஆடரவஞ்சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பில் நிரை கொன்றை
நாறு தாங்கும் நம்பெருமான் மேயது நள்ளாறே. 5

திங்களுச்சி மேல்விளங்கும் தேவன் இமையோர்கள்
எங்களுச்சி யெம்மிறைவன் என்றடியே யிறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்குந் தன்னடியார் கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே. 6

வெஞ்சுடர்த்தீ அங்கையேந்தி விண் கொண்முழவதிர
அஞ்சிடத்தோர் ஆடல் பாடல் பேணுவதன்றியும் போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள் சூடித்திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 7

சிட்டமார்ந்த மும்மதிலுஞ் சிலைவரைத் தீயம்பினால்
சுட்டுமாட்டிச் சுண்ணவெண்ணீறாடுவதன்றியும் போய்ப்
பட்ட மார்ந்த சென்னிமேலோர் பால்மதியஞ்சூடி
நட்டமாடும் நம்பெருமான் மேயது நள்ளாறே. 8

உண்ணலாகா நஞ்சு கண்டத்துண்டுடனே யொடுக்கி
அண்ணலாகா வண்ணல் நீழல் ஆரழல் போலுருவம்
எண்ணலாகாவுள் வினை என்று எள்க வலித்து இருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயது நள்ளாறே. 9

மாசு மெய்யர் மண்டைத்தேரர் குண்டர் குணம் இலிகள்
பேசும் பேச்சை மெய்யென்றெண்ணி யந்நெறிச்செல்லன் மின்
மூசுவண்டார் கொன்றைசூடி மும்மதிலும் உடனே
நாசஞ்செய்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 10

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய தாழ்சடையன்
நண்பு நல்லார் மல்கு காழி ஞானசம்பந்தன் நல்ல
பண்பு நள்ளாறேத்து பாடல் பத்தும் இவைவல்லார்
உண்பு நீங்கி வானவரோடு உலகிலுறைவாரே. 11

(பதிகம் முற்றிற்று)

**திருச்சிற்றம்பலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருவலிவலம்** **பண் : பழந்தக்கராகம்**

மெய்யராகிப் பொய்யை நீக்கி வேதனையைத் துறந்து
செய்யரானார் சிந்தையானே தேவர் குலக்கொழுந்தே
நைவன் நாயேன் உந்தன் நாமம் நாளும் நவிற்றுகின்றேன்
வைய முன்னே வந்துநல்காய் வலிவலமேயவனே.

தாயு நீயே தந்தை நீயே சங்கரனே அடியேன்
ஆயு நின்பால் அன்பு செய்வான் ஆதரிக்கின்றது உள்ளம்
ஆயம் ஆய காயம் தன்னுள் ஐவர் நின்று ஒன்றல் ஒட்டார்
மாயமே என்று அஞ்சுகிறேன் வலிவல மேயவனே.

**திருக்கோளிலி** **பண் : பழந்தக்கராகம்**

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்பு செய்வோம் மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய் நங்கிளைகிளைக்குங் கேடுபடாத்திறம் அருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலி எம் பெருமானே.

# பதிகம் 3

## துன்பங்களை நீக்கி இன்பம் தந்தருளும் பதிகம்

### முதலாம் திருமுறை

**திருநெடுங்களம்** **பண் :பழந்தக்கராகம்**

இப்பதிகத்தை ஓதுவதால் இறையருள் எளிதில் கிட்டும். இறையருள் ஒன்றிருந்தால். மற்றவையெல்லாம் கைகூடும். இறையருளால் சூரியனைக் கண்ட பனிபோல நமது துன்பங்கள் யாவும் அழிந்து இன்பம் பெருகும். தினமும் இப்பதிகத்தை ஓதுதல் நம் அனைவரின் கடமையாகும். வீட்டில் அமைதியும், மங்களமும் ஏற்படும்.

**திருச்சிற்றம்பலம்**

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே என்றுனைப் பேசினல்லால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 1

கனைத்தெழுந்த வேண்டிரைசூழ் கடலிடை நஞ்சு தன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த திருந்திய தேவ நின்னை
மனத்தகத்தோர் பாடல் ஆடல் பேணியிராப் பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 2

நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என்னடியான் உயிரை வவ்வேல் என்றடற் கூற்றுதைத்த
பொன்னடியே பரவி நாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 3

மலைபுரிந்த மன்னவன்றன் மகளையோர் பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கை தங்கும் அவிர்சடை யாரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவநின் தாள் நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 4

பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கி நல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கி நில்லா அன்பினோடுந் தலைவநின் தாள்நிழற்கீழ்
நீங்கி நில்லார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே 5

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர் நான்குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடைமேற் கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவன் அடியிணையே பரவும்
நிருத்தர் கீதர் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 6

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக் கூட்டியோர் வெங்கனையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென்று எம்பெருமான் அணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றின் உச்சிமேல் விளங்கும் கொடிமதில் சூழ் இலங்கை
அன்றி நின்ற அரக்கர்கோனை அருவரைக்கீழ் அடர்த்தாய்
என்று நல்ல வாய்மொழியால் ஏத்தி யிராப்பகலும்
நின்று நைவார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 8

வேழவெண்கொம் பொசித்தமாலும் விளங்கிய நான்முகனும்
சூழவெங்கும் நேட ஆங்கோர் சோதியுளாகி நின்றாய்
கேழல் வெண்கொம் பணிந்தபெம்மான் கேடிலாப் பொன்னடியின்
நீழல்வாழ்வார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 9

வெஞ்சொல் தஞ்சொல் லாக்கிநின்ற வேடமிலாச் சமனும்
தஞ்சமில்லாச் சாக்கியருந் தத்துவமொன் றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால் தோத்திர நின்னடியே
நெஞ்சில் வைப்பார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே. 10

நீடவல்ல வார்ச்சடையான் மேய நெடுங் களத்தைச்
சேடர் வாழும் மாமறுகிற் சிரபுரக்கோன் நலத்தால்
நாடவல்ல பனுவன்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே. 11

(பதிகம் முற்றிற்று)

**திருச்சிற்றம்பலம்**

**திருப்பழனம்** **பண் : தக்கேசி**

வேதம் ஓதி வெண்ணூல்பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதம் சூழப் பொலிய வருவார் புலியின் உரிதோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று
பாதந் தொழுவார் பாவந்தீர்ப்பார் பழன நகராரே

**திருவண்ணாமலை** **பண் : தக்கேசி**

பூவார்மலர் கொண்டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க்கருள் செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவித் தொறுவின் நிறையோடும்
ஆமாம் பிணைவந் தனையுஞ் சாரல் அண்ணாமலையாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாடரவம் இயங்கும் சாரல் அண்ணாமலை யாரை
நல்லார் பரவப் படுவான்காழி ஞானசம்பந்தன்
சொல்லால் மலிந்த பாடலான பத்தும் இவைகற்று
வல்லார் எல்லாம் வானோர் வணங்க மன்னிவாழ்வாரே.

**கோயில்** **பண் :குறிஞ்சி**

செல்வ நெடுமாடஞ் சென்று சேண் ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.

# பதிகம் 4

## வழக்குகளில் வெற்றி பெறவும், தொழில், விவசாயம், வியாபாரம் - இவற்றில் வருவாய் பெருகவும் படிக்க வேண்டிய பதிகம்:

### முதலாம் திருமுறை

**திருவீழிமிழலை** **பண் : குறிஞ்சி**

திருநாவுக்கரசு நாயனாரும் திருஞானசம்பந்தரும் திருவீழிமிழலையில் தங்கி, அங்கு நிலவிய பஞ்சத்தைப் போக்கத் திருவுளம் பற்றினார்கள். இருவரும் மிழலைப் பெருமானிடம் தினமும் படிக்காசு பெற்று அன்னதானம் செய்து வந்தார்கள். சம்பந்தர் பெற்ற காசு வாசியுடையதாக (குற்றம் உடையதாக) இருப்பதை அறிந்து, அக்குற்றம் நீங்க பாடியருளிய பதிகம் இப்பதிகம். இதை அன்புடன் ஒதி உயர்நீதிமன்ற வழக்குகளில் வெற்றி பெற்றவர்கள் பலர். விவசாயத்தில் வளம் பெறவும். வியாபாரத்தில் லாபம் குறையாமலிருக்கவும் இப்பதிகம் பெரிதும் துணைபுரியும் என்பதில் சிறிதும் ஐயம் வேண்டாம்.

வாசி தீரவே காசு நல்குவீர்
மாசில் மிழலையீர் ஏசல் இல்லையே 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவர் ஆயினீர் மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே 2

செய்ய மேனியீர் மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர் உய்ய நல்குமே 3

நீறுபூசினீர் ஏறதேறினீர்
கூறுமிழலையீர் பேறும் அருளுமே 4

காமன்வேவஓர் தூமக்கண்ணினீர்
நாம மிழலையீர் சேம நல்குமே 5

பிணிகொள் சடையினீர் மணிகொள்மிடறினீர்
அணிகொள் மிழலையீர் பணிகொண்டருளுமே 6

மங்கை பங்கினீர் துங்க மிழலையீர்
கங்கை முடியினீர் சங்கை தவிர்மினே 7

அரக்கன் நெரிதர இரக்கம் எய்தினீர்
பரக்கு மிழலையீர் கரக்கை தவிர்மினே 8

அயனு மாலுமாய் முயலு முடியினீர்
இயலு மிழலையீர் பயனும் அருளுமே 9

பறிகொள் தலையினார் அறிவதறிகிலார்
வெறிகொள் மிழலையீர் பிறிவதரியதே 10

காழிமாநகர் வாழி சம்பந்தன்
வீழிமிழலைமேல் தாழும் மொழிகளே 11
(பதிகம் முற்றிற்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிகம் 5

## பிரசவம் இனிதே நடைபெற உதவும் பதிகம்

காவிரி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள சிவத்தலம் திருச்சிராப்பள்ளி ஆகும். இத்தலத்து சுவாமிக்குத் ''தாயுமானார்'' என்று பெயர். கோயில் மலைமேல் உள்ளது. இது 'தட்சண கைலாயம்' எனப்படும். சுவாமியிடம் மிகுந்த அன்புடைய மாது ஒருவர் காவிரியின் வடகரையில் வாழ்ந்து வந்தாள். இவளுடைய பிரசவ காலத்தில் காவிரி பெருகியதால், தாய், தந்தையர் உதவ முடியவில்லை. அச்சமயத்தில் சுவாமியை வேண்ட, அவர் அவளுடைய தாயின் வடிவில் வந்து மருத்துவம் செய்து, பிரசவம் இனிதே நடைபெற அருளினார். இத் தலத்து இறைவனை வழிபட்டு சம்பந்தரால் பாடப்பெற்ற இப் பதிகத்தை ஓதினால் பிரசவத்தில் எந்த சங்கடமும் ஏற்படாது இனிதே முடியும் என்பது பல பெரியவர்கள் அனுபவித்த உண்மையாகும்.

**திருச்சிராப்பள்ளி** **பண் : குறிஞ்சி**

நன்றுடையானைத் தீயதிலானை நரை வெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளி
குன்றுடையானைக் கூற என்னுள்ளங் குளிரும்மே. 1

கைம்மகவேந்தி கடுவனொடு ஊடிக்கழைபாய் வான்
செம்முக மந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முகவேழத்து ஈருரி போர்த்த விகிர்தாநீ
பைம்முக நாகம் மதியுடன் வைத்தல் பழியன்றே. 2

மந்தம் முழவம் மழலை ததும்ப வரைநீழல்
செந்தண் புனமுஞ் சுனையுஞ் சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம் மலர்கள் சடைமேலுடையார் விடையூரும்
எந்தம் அடிகள் அடியார்க்கு அல்லல் இல்லையே. 3

துறை மல்கு சாரற் சுனை மல்கு நீலத்திடை வைகிச்
சிறை மல்கு வண்டுந்தும்பியும் பாடுஞ் சிராப்பள்ளிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறை மல்கு கண்டன் கனலெரியாடுங் கடவுள் எம்
பிறை மல்கு சென்னி யுடையவன் எங்கள் பெருமானே. 4

கொலை வரையாத கொள்கையர் தங்கள் மதில் மூன்றும்
சிலைவரையாகச் செற்றனரேனுஞ் சிராப்பள்ளித்
தலைவரை நாளுந் தலைவரல்லாமையுரைப் பீர்காள்
நிலவரை நீலமுண்டதும் வெள்ளை நிறமாமே. 5

வெய்யதண் சாரல் விரிநிற வேங்கைத் தண்போது
செய்ய பொன் சேருஞ் சிராப்பள்ளி மேய செலவனார்
தையலோர் பாகம்மகிழ்வர் நஞ்சுண்பர் தலையோட்டில்
ஐயமுங் கொள்வர் ஆரிவர் செய்கை அறிவாரே. 6

வேயுயர் சாரல் கருவிரலூகம் விளையாடும்
சேயுயர் கோயிற் சிராப்பள்ளி மேய செல்வனார்
பேயுயர் கொள்ளி கை விளக்காகப் பெருமானார்
தீயுகந்தாடல் திருக்குறிப்பாயிற் றாகாதே. 7

மலைமல்கு தோளன் வலிகெடவூன்றி மலரோன்தன்
தலைகலனாகப் பலிதிரிந்துண்பர் பழியோரார்
சொலவல வேதஞ் சொலவல கீதஞ் சொல்லுங்கால்
சிலவல போலுஞ் சிராப்பள்ளிச் சேடர் செய்கையே. 8

அரப்பள்ளியானும் மலர் உறைவானும் அறியாமைக்
கரப்புள்ளி நாடிக் கண்டிலரேனுங் கல்சூழ்ந்த
சிரப்பள்ளி மேய வார்சடைச் செல்வர் மனைதோறும்
இரப்புள்ளீர் உம்மை யேதிலர் கண்டால் இகழாரே. 9

நாணாது உடை நீத்தோர்களுங் கஞ்சி நாட்காலை
ஊணாப் பகல் உண்டு ஓதுவார்கள் உரைக்குஞ்சொல்
பேணாது உறுசீர் பெறுதும் என்பீர் எம்பெருமானார்
சேணார் கோயில் சிராப்பள்ளி சென்று சேர்மினே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனயம் பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரை சூழ்ந்த
கானல் சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்தன் நலமிகு பாடல் இவைவல்லார்
வானசம்பந்தத் தவரோடு மன்னி வாழ்வாரே. 11

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

# பதிகம் 6

## குளிர் காய்ச்சல், வினையால் வரும் துன்பங்கள் நீங்க பாராயணம் செய்ய வேண்டிய பதிகம்

கொடிமாடச் செங்குன்றூரில் சம்பந்தப் பெருமான் அடியார்களுடன் தங்கி இருக்கும் சமயத்தில், அடியார்கள் குளிர் காய்ச்சலால் வருத்தம் அடைந்தனர். வினையால் வரும் இக்குளிர் காய்ச்சல் நோயிலிருந்து அடியார்களை விடுவிக்கப் பாடியருளிய பதிகம் இப்பதிகம். நோய்கள் எல்லாம் நாம் செய்யும் தீவினையால் வருபவையேயாகும். இப்பதிகத்தை அன்புடன் ஓதிவந்தால் தீவினையால் வரும் நோய்கள் நம்மைப் பாதிக்காது என்பது அனுபவத்தால் அறியலாம்.

**திருச்சிற்றம்பலம்**

## முதலாம் திருமுறை

**பொது** **பண் : வியாழக்குறிஞ்சி**

அவ்வினைக் கிவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம். 1

காவினை இட்டும் குளம்பல தொட்டும் கனி மனத்தால்
ஏவினையால் எயில் மூன்றெரித்தீர் என்று இருபொழுதும்
பூவினைக்கொய்து மலரடி போற்றுதும் நாம் அடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம். 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முலைத்தடம் மூழ்கிய போகங்களும் மற்றெவையும் எல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டெமை ஆண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும் மழுவும் இவை உடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம். 3

விண்ணுலகாள்கின்ற விச்சாதரர்களும் வேதியரும்
புண்ணியர் என்று இருபோதும் தொழப்படும் புண்ணியரே
கண் இமையாதன மூன்றுடையீர் உம் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 4

மற்றுஇணை இல்லா மலை திரண்டன்ன திண் தோளுடையீர்
கிற்றெமை ஆட்கொண்டு கேளாதொழிவதும் தன்மை கொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்து உம்திருவடியே அடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம். 5

மறக்கும் மனத்தினை மாற்றி எம்ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக்கீழ் பிழையாத வண்ணம்
பறித்த மலர் கொடுவந்துமை ஏத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 6-7

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்தும் கழலடிக்கே
உருகிமலர் கொடு வந்துமை யேத்தும் நாம் அடியோம்
செருவில் அரக்கனைச் சீரில் அடர்த்து அருள் செய்தவரே
திருஇலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 8

நாற்றமலர்மிசை நான் முகன் நாரணன் வாதுசெய்து
தோற்றமுடைய அடியும் முடியும் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குதும் நாம் அடியோம்
சீற்றமதாம் வினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 9

சாக்கியப் பட்டும் சமண் உருவாகி உடை ஒழிந்தும்
பாக்கியமின்றி இருதலைப் போகமும் பற்றும் விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர் அடி போற்றுகின்றோம்
தீக்குழி தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம். 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த பிறவியில் பேணி எம் செல்வன் கழல் அடைவான்
இறந்த பிறவி உண்டாகில் இமையவர்கோன் அடிக்கண்
திறம்பயில் ஞானசம்பந்தன் செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடும் கூடுவரே. 11

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

**திருவையாறு** **பண் : மேகராகக்குறிஞ்சி**

புலனைந்தும் பொறிகலங்கி நெறி மயங்கி
அறிவு அழிந்திட்டு ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்று
அருள் செய்வான் அமருங்கோயில்
வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சில மந்தி அலமந்து மரம் ஏறி
முகில் பார்க்கும் திருவையாறே

**திருத்தருமபுரம்** **பண் : யாழ்முரி**

மாதர் மடப்பிடியும் மட அன்னமும் அன்னதோர்
நடை உடைம் மலைமகள் துணை என மகிழ்வர்
பூத இனப்படை நின்று இசை பாடவும் ஆடுவர்
அவர்படர் சடைந்நெடு முடியதோர் புனலர்
வேதமொடு ஏழிசைபாடுவர் ஆழ்கடல் வெண்திரை
இரைந் நுரை கரை பொருது விம்மிநின்றயலே
தாதவிழ் புன்னை தயங்கு மலர்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயில் தருமபுரம் பதியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிகம் 7

## தடைப்பட்ட திருமணம் (பெண், ஆண் அனைவருக்கும்) இனிதே விரைவில் நடைபெற அன்புடன் ஓதவேண்டிய பதிகம்

சம்பந்தர் திருமருகலில் எழுந்தருளியுள்ள மாணிக்க வண்ணர் கழலினை வணங்கும் பொருட்டு ஆலயத்திற்கு வந்து கொண்டிருந்தார். அது சமயம் வணிகப் பெண்ணின் அழுகுரல் அவரது செவியில் விழுந்தது. அந் நாளில், வணிகன் மகள் ஒருத்தி, தன்னை மணம்புரிய இருந்த ஒருவனுடன் மடத்தில் துயின்றாள். இரவில் பாம்பு கடித்து மணமகன் இறந்து போனான். இத்துயரம் நீங்கி, இறந்தவன் எழுந்து திருமணம் இனிதே நடக்க அருளும்படி சம்பந்தர் இறைவனை வேண்டிப் பாடிய பதிகம் இது. பதிகம் முடிந்ததும் இறந்தவன், உறங்கியவன் எழுவது போல எழுந்தான். திருமணமும் முடிந்தது. இன்றும், திருமணமாகாதவர்கள் இப்பதிகத்தைப் பாடிப்பலன் பெற்று வருகின்றனர்.

**திருச்சிற்றம்பலம்**

### இரண்டாம் திருமுறை

**திருமருகல்** **பண் : இந்தளம்**

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள்மெலிவே. 1

சிந்தா எனுமால் சிவனே எனுமால்
முந்தா எனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள் ஏசறவே. 2

அறையார் கழலும் அழல் வாயரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வாயிவளை
இறையார் வளைகொண் டெழில் வவ்வினையே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிநீர் சடையில் கரந்தாயுலகம்
பலிநீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகல் மகிழ்வாயிவளை
மெலிநீர் மையள் ஆக்கவும் வேண்டினையே. 4

துணிநீல வண்ணம் முகில் தோன்றியன்ன
மணிநீலகண்டம் உடையாய் மருகல்
கணிநீலவண்டார் குழலாள் இவள்தன்
அணிநீல ஒண்கண் அயர்வு ஆக்கினையே. 5

பலரும் பரவப்படுவாய் சடைமேல்
மலரும் பிறை ஒன்றுடையாய் மருகல்
புலரும் தனையும் துயிலாள் புடைபோந்து
அலரும் படுமோ அடியாள் இவளே. 6

வழுவாள் பெருமான் கழல் வாழ்களன
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகல் பெருமான்
தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே. 7

இலங்கைக்கு இறைவன் விலங்கல் எடுப்பத்
துலங்கவ் விரல் ஊன்றலும் தோன்றலனாய்
வலங்கொள் மதில் சூழ் மருகல் பெருமான்
அலங்கல் இவளை அலர் ஆக்கினையே. 8

எரியார் சடையும் அடியும் இருவர்
தெரியாத தொர் தீத்திரளாய் ஆயவனே
மரியார் பிரியா மருகல் பெருமான்
அரியாள் இவளை அயர்வாக்கினையே. 9

அறிவில் சமணும் அலர் சாக்கியரும்
நெறியல்லன செய்தனர் நின்றுழல்வார்
மறிஏந்து கையாய் மருகல் பெருமான்
நெறியார் குழலி நிறை நீக்கினையே. 10

வயஞானம் வல்லார் மருகல் பெருமான்
உயர்ஞானம் உணர்ந்து அடி உள்குதலால்
இயல்ஞான சம்பந்தன் பாடல் வல்லார்
வியன் ஞாலமெல்லாம் விளங்கும் புகழே. 11

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிகம் 8

## குழந்தை செல்வம் பெற பாராயணம் செய்ய வேண்டிய பதிகம்

திருஞானசம்பந்தப் பெருமான் 'திருவெண்காடு' உறையும் பெருமானை வணங்கி அருளிய அரிய பதிகம் இத்திருப்பதிகம். தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள 'பெண்ணாடம்' என்னும் ஊரில் 'அச்சுத களப்பாளர்' என்பவர் வசித்து வந்தார். குழந்தைச் செல்வமின்றி நீண்ட நாட்களாக வருத்தமுற்றிருந்தார் அவர். இக்குறையை அவர் தம் குல குருவாகிய 'சகலாகம பண்டிதரிடம்' கூறினார். அப்பண்டிதரும், தமிழ் வேதமாகிய தேவாரத்திருமுறை நூலில் கயிறு சாத்திப்பார்த்தார். அது சமயம் இப்பதிகம் வந்தது.

குலகுருவின் அறிவுரைப்படியே, அச்சுதகளப்பாளர் தம்பதிகள் திருவெண்காடு அடைந்து, முக்குள தீர்த்தத்தில் நீராடி ஆலய வழிபாடு செய்து வந்தார்கள். இதன் பயனாகவே சந்தனா சாரியர்களில் மிகச் சிறந்தவரான ''மெய்கண்டார்'' எனும் அரியஞானியை மகனாகப் பெற்றார்கள்.

இப்பதிகத்தை 48 நாட்கள் காலையும் மாலையும் ஓதி, திருவெண்காடு பெருமானை ஒரு முறை வணங்கினால், நல்ல பிள்ளையைப் பெறலாம் என்பது தமிழ் வேதத்தின் ஆணையாகும். (இவ்விரதம் அனுட்டிப்பவர்கள் தினமும் காலையில் பசுவிற்கு ஒரு பிடி புல் அல்லது பழம் அளித்தல் மிகவும் நலமே ஆகும்) பலர் பலன் பெற்றுள்ளனர்.

**திருச்சிற்றம்பலம்**

**திருவெண்காடு** **பண் : சீகாமரம்**

கண்காட்டும் நுதலானுங், கனல் காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும், பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும், பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடை காட்டும் கொடியானே 1

பேய் அடையா பிரிவு எய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு
ஆயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்
வேயன தோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய் வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீவினையே 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணோடு நீர், அனல், காலோடு ஆகாயம் மதி இரவி
எண்ணில் வரும் இயமானன் இகபரமும் எண்திசையும்
பெண்ணினொடு ஆண், பெருமையொடும் சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர் கோன் வழிபட வெண்காடு இடமா விரும்பினேனே 3

விடமுண்ட மிடற்று அண்ணல் வெண்காடடின் தண்புறவின்
மடல் விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகு என்று
தடமண்டு துறைக்கெண்டை தாமரையின்பூ மறையக்
கடல் விண்ட கதிர் முத்த நகை காட்டும் காட்சியதே 4

வேலைமலி தண்கானல் வெண் காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடு நன் மறையவன்தன்
மேல் அடர், வெங்காலன், உயிர், விண்டபினை நமன் தூதர்
ஆலமிடற்றான் அடியார் என்று அடர அஞ்சுவரே 5

தண் மதியும் வெய்யரவும் தாங்கினான் சடையினுடன்
ஒண் மதியநுதல் உமைஓர் கூறு உகந்தான் உறைகோயில்
பண்மொழியால் அவன் நாமம் பலஓதப் பசுங்கிள்ளை
வெண்முகில்சேர் கரும்பெணைமேல் வீற்றிருக்கும் வெண்காடே6

சக்கரம் மாற்கு ஈந்தானும் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமேல் அசைத்தானும் அடைந்த அயிராவதம் பணிய
மிக்கு அதனுக்கு அருள் சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளம் நன்கு உடையானும் முக்கண் உடை இறைவனே 7
பண்மொய்த்த இன்மொழியாள் பயம் எய்த மலை எடுத்த
உன்மத்தன் உரம் நெரித்து அன்று அருள் செய்தான் உறைகோவில்
கண்மொய்த்த கருமஞ்ஞை நடமாடக் கடல் முழங்க
விண் மொய்த்த பொழில் வரிவண்டு இசை முரலும் வெண்காடே 8

கள்ளார் செங்கமலத்தான் கடல் கிடந்தான் என இவர்கள்
ஒள்ளாண்மை கொளற்கு ஓடி உயர்ந்து ஆழ்ந்தும் உணர்வரியான்
வெள்ளானை தவம் செய்யும் மேதகு வெண்காட்டான் என்று
உள்ளாடி உருகாதார் உணவுடைமை உணரோமே 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதியர்கள் பிண்டியர்கள் மிண்டு மொழிபொருள் என்றும்
பேதையர்கள் அவர், பிரிமின் அறிவுடையீர் இது கேண்மின்
வேதியர்கள் விரும்பிய சீர்வியன் திருவெண்காட்டான் என்று
ஓதியவர் யாதும் ஒரு தீது இலர் என்று உணருமினே. 10

தண்பொழில் சூழ் சண்பையர் கோன் தமிழ் ஞானசம்பந்தன்
விண்பொலி வெண்பிறைச் சென்னி விகிர்தன் உறை
வெண்காட்டைப்
பண்பொலி செந்தமிழ் மாலை பாடிய பத்து இவை வல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர் போய் வான் பொலியப் புகுவாரே. 11

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

# பதிகம் 9

## வெப்பத்தினால் உண்டாகும் நோய்களான ஜுரம், அம்மை முதலியன நீக்கும் பதிகம்

இப்பதிகம் 'திருநீற்றுப் பதிகம்' எனப்படும். அனைவராலும் ஓதப்படும் திருப்பதிகமாகும். சம்பந்தர் மதுரையில் ஓர் மடத்தில் அடியார்களுடன் தங்கி இருக்கின்றார். இதையறிந்த சமணர்கள், அம்மடத்திற்கு தீ வைத்தார்கள். இத்தீயை பையவே சென்று பாண்டியற்கு ஆகுக என்று சம்பந்தர் ஆணையிட்டார். கூன் பாண்டியன் தீராத வெப்பு நோயால் வருந்தினான். இந்நோயைத் தீர்க்க எவ்வளவு முயன்றும் சமணர்களால் இயலவில்லை. பின்னர் சம்பந்தப் பெருமான் இப்பதிகத்தை ஓதி திருநீறு அளித்தார். பாண்டிய மன்னனும் நோய் நீங்கி பேரின்பம் பெற்றான். சிவபூசை செய்யும் அன்பர்கள், திருநீறு உடம்பில் அணியும்பொழுது இப்பதிகத்தை ஓதியே செய்ய வேண்டும். எல்லாவிதமான நோய்க்கும், தீங்கிற்கும், இந்த பதிகத்தை ஓதி திருநீறு அணிந்தால், தவறாமல் பயன் அடையலாம். பயம், தீயகனவுகள், உடல் நலிவு போன்ற எல்லாவற்றிற்கும் இப்பதிகம் நல்ல பலனைத் தரும் என்பதில் ஐயமே வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Om Sri Sairam



# இரண்டாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

**திருவாலவாய்** **பண் : காந்தாரம்**

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே. 1

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. 2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே. 3

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே. 4

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே. 5

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. 6

எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவாயான் திருநீறே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Om Sri Sairam



இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயான் திருநீறே. 8

மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏலவுடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலமது உண்டமிடற்று எம் ஆலவாயான் திருநீறே. 9

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண் திகைப்பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப்பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே. 10

ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

# பதிகம் 10

## கோளறு பதிகம்

### நவக்கிரகங்களால் ஏற்படும் எல்லாவித தோஷங்களும் நீங்கும் பொருட்டு பாராயணம் செய்ய வேண்டிய பதிகம்

திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தப் பெருமானும் திருமறைக் காட்டில் தங்கி வேதவனப் பெருமானைப் பாடிப் பரவிக் கொண்டிருக்கின்றனர். அது சமயம், பாண்டி நாட்டிலிருந்து அரசியார் அனுப்ப ஓர் ஏவலாள் அங்கு வந்தான். பாண்டி நாடு சமண இருளில் மூழ்கியுள்ளதாகவும், சைவ ஒளி குன்றியுள்ளதாகவும் கூறி, சம்பந்தப் பெருமானை அழைத்து வரும்படி அரசியார் பணித்ததைக் கூறி வணங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானசம்பந்தரும் மதுரை செல்ல உடன்பட்டு எழுந்தார். இதனைக் கண்ட நாவுக்கரசர், ''ஐயன்மீர்! நாளும் கோளும் சரியில்லை, சமணர்கள் வஞ்சனை மிக்கவர்கள், நீர் போக வேண்டாம்'' என்று அருளிச் செய்தார்.

இதனைக் கேட்ட சம்பந்தர், ''அப்பர் பெருமானே! சிவனடியே சிந்திக்கும் சிவனடியார்களை நாளும் கோளும் யாது செய்யும்? மேலும் அவை யாவும் நமக்கு நலமே புரியும்'' என்று கூறி இப்பதிகத்தைப் பாடியருளினார்.

பிறகு சம்பந்தர் சமணர்களை வாதில் வென்றதும் சைவத்தை ஒளிபெறச் செய்ததும் நாம் அறிவோம். கிரகங்களினால் எற்படும் தோஷம் நீங்க, நம்மில் பலர் வேண்டாதனவற்றையெல்லாம் செய்து மேலும் துன்பத்திற்கே ஆளாகின்றார்கள். இதையெல்லாம் விடுத்து, இப்பதிகத்தை பக்தி சிரத்தையுடன் காலையும் மாலையும் பாராயணம் செய்தால் எல்லாவித தோஷங்களும் நீங்கும் என்பது ஞானப் பாலுண்ட சம்பந்தருடைய அருள்வாக்காகும்.

இன்றும் பிரயாணத்தின் போதும், சகுனம் சரியில்லாத நேரத்திலும், பலர் இப்பதிகத்தைப் பாராயணம் செய்து நலம் பெறுவது தெரிந்ததே ஆகும். இது ஓர் அற்புதப் பதிகமாகும்.

**திருச்சிற்றம்பலம்**

Om Sri Sairam

## இரண்டாம் திருமுறை

**பொது** **பண் : பியந்தைக்காந்தாரம்**

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 1

என்போடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை உடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்து என்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வமான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 3

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறைஓதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்கள் ஆன பலவும்
அதிகுண நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடை ஏறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Om Sri Sairam



வாள்வரி அதள தாடை வரிகோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானைகேழல்
கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 6

செப்பிள முலைநன் மங்கை ஒரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னி கொன்றை மலர் சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரயன்றனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரன் நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Om Sri Sairam



கொத்தலர் குழலி யோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொள் ஆலை விளை செந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

**சீர்காழி** **பண் : நட்டராகம்**

நம் பொருள் நம்மக்கள் என்று நச்சி இச்சை செய்துநீர்
அம்பரம் அடைந்துசால அல்லல் உய்ப்பதன் முனம்
உம்பர் நாதன் உத்தமன் ஒளிமிகுந்த செஞ்சடை
நம்பன்மேவு நன்னகர் நலங்கொள்காழி சேர்மினே.

**திருவலஞ்சுழி** **பண் : நட்டராகம்**

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னம் நீ புரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திருவலஞ்சுழீ
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம்பந்தன் வாய் நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித்து இசை கற்றுவல்லார் சொலக் கேட்டு கந்தவர் தம்மை
வாதியாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம்
வந்தடையாவே

**திருக்கேதாரம்** **பண் :செவ்வழி**

தொண்டர் அஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யும் இடம் என்பரால்
வண்டுபாட மயிலாட மான்கன்று துள்ளவரிக்
கெண்டை பாயச்சுனைநீல மொட்டலரும் கேதாரமே.

# பதிகம் 11

## தரித்திரம் நீங்கி பொருள் பெறுதற்குப் பாராயணம் செய்ய வேண்டிய பதிகம் :

திருஞான சம்பந்தப் பெருமான் திருவாவடுதுறை வருகிறார். இவரது தந்தையார் யாகம் செய்யப் பொருள் வேண்டினார். உடனே, சம்பந்தரும் ஆவடுதுறை உறையும் எந்தையின் அடித்தலங்களே அந்தமில் பொருள் என்று எண்ணி இத்திருப்பதிகத்தைப் பாடினார். பெருமானும் ஆயிரம் பொற்காசுகள் கொண்ட உலவாக்கிழியைப் பலி பீடத்திலே வைத்தருளினார்.

பொருள் வேண்டித் பலவித ஹோமங்கள், செய் (மற்றும் எதை எதையோ நாடி ஏமாற்றம் அடையாமல்) வதைப்போல இப்பதிகத்தைப் பேரவா இன்றி அன்புள்ளத்துடனும், நம்பிக்கையுடனும் பாராயணம் செய்து வந்தால் இல்லறம் வறுமையின்றி வளமுடன் நடைபெறும்.

**திருச்சிற்றம்பலம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Om Sri Sairam



# மூன்றாம் திருமுறை

திருவாவடுதுறை பண் : காந்தார பஞ்சமம்

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழு தெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 1

வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழிளம் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 2

நனவினும் கனவினும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங் கொன்றைப் போதணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 3

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாது என்நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதில் எரி எழ முனிந்தவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 4

கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தனை செய்யேன்
கொய்யணி நறுமலர் குலாய சென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Om Sri Sairam



வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய் உன்னடியலால் ஏத்தாது என்நா
ஐந்தலை அரவுகொண்டு அரைக்கசைத்த
சந்த வெண் பொடியணி சங்கரனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 6

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் அடியலால் அரற்றாது என்நா
ஒப்புடை ஒருவனை உருவழிய
அப்படி அழல் எழ விழித்தவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 7

பேரிடர் பெருகி ஓர் பிணிவரினும்
சீருடைக் கழல் அலால் சிந்தை செய்யேன்
ஏருடை மணிமுடி யிராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 8

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மலர் அடியலால் உரையாது என்நாக்
கண்ணனும் கடிகமழ் தாமரை மேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 9

அலைபுனல் ஆவடுதுறை அமர்ந்த
இலைநுனை வேற்படை யெம் இறையை
நலமிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயின நீங்கிப் போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாக முன் ஏறுவர் நிலமிசை நிலையிலரே. 10

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிகம் 12

## சிவபுண்ணியம் பெறவும், தீவினைகள் நீங்கவும் பாராயணம் செய்ய வேண்டிய பதிகம்

இப்பதிகம் பஞ்சாக்கரத் திருப்பதிகம் எனப்படும். ஆதி மந்திரமாய் விளங்குகின்ற திருஐந்தெழுத்தின் மேன்மைகளை எல்லாம் சம்பந்தப் பெருமான் இப்பதிகத்தில் அருளிச் செய்துள்ளார். ஆன்மா கடைத்தேறும் பொருட்டு இப்பதிகத்தை அனுதினமும் பாராயணம் செய்தல் வேண்டும். இதனால் தீவினைகள் யாவும் நீங்கி, சிவபுண்ணியம் மேலோங்கும். இரத்த அழுத்த நோய் போன்றவை குணமாகும். வாழ்நாள் நீடிக்கும் மனக்கவலைகள் அழிந்தொழியும்.

## மூன்றாம் திருமுறை

**பஞ்சாக்கரத் திருப்பதிகம்** **பண் : காந்தார பஞ்சமம்**

**திருச்சிற்றம்பலம்**

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்துநினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடிவாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே. 1

மந்திர நான்மறைஆகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே. 2

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்
தேனை வழி திறந்து ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே. 3

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல் கெடச் சிவமுத்தி காட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்கு அலர் மன்மதன் வாளி ஐந்து அகத்து
அங்குள பூதம் அஞ்ச ஐம்பொழில்
தங்கு அரவின் படம் அஞ்சும் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்துமே. 5

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினை அடர்த்து எய்தும் போழ்தினும்
அம்மையினும் துணை அஞ்செழுத்துமே. 6

வீடு பிறப்பை அறுத்துமெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி உகப்பன அஞ்செழுத்துமே. 7

வண்டு அமர் ஓதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்தபின் அவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செழுத்துமே. 8

கார்வணன் நான்முகன் காணுதற்கு ஓணாச்
சீர்வணச் சேவடி செவ்விநாள் தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவண அஞ்செழுத்துமே. 9

புத்தர் சமண் கழுக்கையர் பொய் கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறு அணிவார் வினைப் பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செழுத்துமே. 10

நற்றமிழ் ஞான சம்பந்தன் நான் மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலை ஈரைந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்பர் ஆவரே. 11

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிகம் 13

## நல்ல ஒலி அலைகள் பரவி மங்களம் பெருகவும் திருமணம், மணிவிழா போன்ற சுபநிகழ்ச்சிகளில் வாழ்த்தவும் பயன்படுத்த வேண்டிய ''மங்களப் பதிகம்''

திருஞான சம்பந்தப் பெருமான் மதுரை மாநகரில் தங்கி வழிபாடு செய்து கொண்டிருந்த சமயம், அவருடைய தந்தையார் சிவபாத இருதயர் அங்கு வந்து சேர்ந்தார். இந்த உடலுக்குக் காரணமான தந்தையைப் பார்த்த உடனே சம்பந்தருக்கு, உயிர்க்கு உறுதுணையாய் இருக்கும் சிவபெருமானுடைய நினைவு வந்தது. ஆண்டவனின் அளப்பெருங் கருணையை எண்ணி மகிழ்ந்து அருளிய பதிகம் இப்பதிகமாகும்.

திருமணம் நடைபெறும் பொழுதும், அறுபதாம் ஆண்டு நிறைவு விழா போன்ற மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும் பொழுதும் பாடவேண்டிய மங்களத் திருப்பதிகமாகும். இப்பதிகம் ஒவ்வொரு திருமணத்திலும் அவசியம் ஓத வேண்டிய பதிகமாகும். தம்பதிகள் கடவுளின் ஆசியைப் பெற்று எல்லா வளமும் நலமும் பெற்றுத் திகழ இப்பதிகம் பெரிதும் துணைபுரியும்.

**திருச்சிற்றம்பலம்**

**திருக்கழுமலர்** **பண் : காந்தாரபஞ்சமம்**

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்ல.்.துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே. 1

போதையார் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தான் எனை ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டனை செய்தொழில் துயர் அறுத்து உய்யலாம்
வண்டணைக் கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண் துணை நெற்றியான் கழுமல வளநகர்ப்
பெண்துணையாக ஓர் பெருந்தகை இருந்ததே. 3

அயர்வுளோம் என்றுநீ அசைவு ஒழி நெஞ்சமே
நியர்வளை முன்கையாள் நேரிழை அவளொடும்
கயல்வயல் குதிகொளும் கழுமல வளநகர்ப்
பெயர்பல துதிசெயப் பெருந்தகை இருந்ததே. 4

அடைவிலோம் என்றுநீ அயர்வொழி நெஞ்சமே
விடை அமர் கொடியினான் விண்ணவர் தொழுதெழும்
கடைஉயர் மாடமார் கழுமல வளநகர்ப்
பெடை நடை அவளொடும் பெருந்தகை இருந்ததே. 5

மற்றொரு பற்றிலை நெஞ்சமே மறைபல
கற்றநல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடைப்பேரல் குல்திருந்திழை யவளொடும்
பெற்றெனை ஆளுடைப் பெருந்தகை இருந்ததே. 6

குறைவளை அதுமொழி குறைவுஒழி நெஞ்சமே
நிறைவன முன்கையாள் நேரிழை அவளொடும்
கறைவளர் பொழிலணி கழுமல வளநகர்ப்
பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை இருந்ததே. 7

அரக்கனார் அருவரை எடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால் நீடியாழ் பாடவே
கருக்குவாள் அருள் செய்தான் கழுமல வளநகர்ப்
பெருக்கு நீர் அவளோடும் பெருந்தகை இருந்ததே. 8

நெடியவன் பிரமனும் நினைப்பரிதாய் அவர்
அடியொடு முடியறியா அழல் உருவினன்
கடிகமழ் பொழில்அணி கழுமல வளநகர்ப்
பிடிநடை அவளொடும் பெருந்தகை இருந்ததே. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாருறு தட்டுடைச் சமணர் சாக்கியர்கள்தம்
ஆருறு சொற்களைந் தடியினை அடைந்துய்ம்மின்
காருறு பொழில்வளர் கழுமல வளநகர்ப்
பேரறத் தாளொடும் பெருந்தகை இருந்ததே. 10

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோடு இருந்த எம்பிரான்தனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன் செந்தமிழ்
விரும்புவார் அவர்கள் போய் விண்ணுல காள்வரே. 11

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

**திருச்சிற்றம்பலம்**

**திருந்து தேவன்குடி** **பண் : கொல்லி**

மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் இவை
புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள் இவை
திருந்து தேவன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே.

# பதிகம் 14

## மனக்கவலைகள் ஒழியவும் பிறவாநிலை எய்தவும் பாராயணம் செய்ய வேண்டிய பதிகம்

பலதலங்களையும் தரிசித்துக்கொண்டு சம்பந்தப் பெருமான் சீர்காழி வருகின்றார். அச் சமயத்தில், பெரியோர்களின் விருப்பப்படியே, நல்லூர்ப் பெருமணம் எனுமிடத்தில் திருமணம் நடைபெறுகிறது. திருமணம் முடிந்ததும், சம்பந்தப்பெருமான், நல்லூர்ப் பெருமண ஊரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வேண்ட, கர்ப்பக் கிரகத்தில் அரும்பெரும் ஜோதி தோன்றியது. அச்சமயத்தில் இப்பஞ்சாக்கரப் பதிகத்தைப் பாடிய வண்ணம் அனைவருடனும் சோதியில் கலந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Om Sri Sairam



இப்பதிகத்தைப் பாராயணம் செய்வதால் மனக்கவலை மாறும், பதி புண்ணியம் பெருகும், உயிர்க்கு உறுதி ஏற்பட்டு பிறவாநிலை எய்தலாம்.

திருச்சிற்றம்பலம்

# மூன்றாம் திருமுறை

நமச்சிவாயப் பதிகம் பண் : கௌசிகம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே. 1

நம்புவார் அவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாண் மலர்வார் மது ஒப்பது
செம்பொனார் திலகம் உலகுக்கு எலாம்
நம்பன் நாமம் நமச்சிவாயவே. 2

நெக்குள் ஆர்வம் மிகப் பெருகி நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவர்
தக்க வானவராத் தகுவிப்பது
நக்கன் நாமம் நமச்சிவாயவே. 3

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம் வந்து ஓத வல்லார்தமை நண்ணினால்
நியமந்தான் நினைவார்க்கு இனியான் நெற்றி
நயனன் நாமம் நமச்சிவாயவே. 4

கொல்வார் ஏனும் குணம் பல நன்மைகள்
இல்லார் எனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே. 5

மந்தரம் அன்ன பாவங்கள் மேவிய
பந்தனை யவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாமம் நமச்சிவாயவே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Om Sri Sairam



நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும்
உரைசெய்வாயினர் ஆயின் உருத்திரர்
விரவியே புகவித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சிவாயவே. 7

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால் விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சிவாயவே. 8

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதம் தான் முடி நேடிய பண்பராய்
யாதும் காண் பரிதாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சிவாயவே. 9

கஞ்சி மண்டையர் கையில் உண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுன் கண்டன் நமச்சிவாயவே. 10

நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லார் எலாம்
பந்தபாசம் அறுக்க வல்லார்களே.11

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

**திருப்பனந்தாள்** **பண் : பஞ்சமம்**

சூழ்தருவல்வினையும் உடல்தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல் மிக ஏத்துமின் பாய்புனலும்
போழிள வெண்மதியும் அனல் பொங்கர விம்புனைந்த
தாழ்சடை யான்பனந்தாள் திருத்தாடகை யீச்சரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிகம் 15

## எலும்பு முறிவு குணமடையவும் முற்பிறப்பு வினைகள் நீங்கவும் உதவும் பதிகம்

காஞ்சீபுரத்திற்கு அருகில் உள்ள அரிய தலமாகிய 'திருமாகறல்' எனும் பதியில் அருளியது இப்பதிகம். இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், ''தீவினைகள் தீருமுடனே'', தொல்வினைகள் ஒல்கும், வினைகள் அகலுமே, எனச் சம்பந்தப் பெருமான் பாடியுள்ளார். நம்முடைய பழவினைகள் (சஞ்சிதவினை) அழிந்தொழிய வேண்டும். அப்பொழுதுதான் நமக்கு இன்பமும் துன்பமும் நீங்கும். பிறகே முத்தி நிலை எய்தும். முற்பிறப்பில் செய்த தீவினைகளால் தான் நமக்கு நோய்கள், வறுமை, பகைமை போன்ற துன்பங்கள் வருகின்றன. இத்தீவினைகள் நீங்க இப்பதிகத்தை ஓதினால் கைமேல் பலன் பெறலாம்.

**திருச்சிற்றம்பலம்**

**திருமாகறல்** **பண் :சாதாரி**

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை யாடல் அரவம்
மங்குலொடுநீள்கொடிகண் மாடமலி
நீடுபொழில் மாகறல் உளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர்
திங்களணி செஞ்சடையினான்
செங்கண்விடை அண்ணலடி சேர்பவர்கள்
தீவினைகள் தீரும் உடனே. 1

கலையின் ஒலி மங்கையர்கள் பாடல் ஒலி
ஆடல்கவின் எய்தி அழகார்
மலையின் நிகர் மாடம் உயர் நீள்கொடிகள்
வீசுமலி மாகறல் உளான்
இலையின் மலி வேல் நுனைய சூலம் வலன்
ஏந்தி எரிபுன் சடையினுள்
அலைகொல்புனல் ஏந்து பெருமான் அடியை
ஏத்த வினை அகலுமிகவே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையொடு துந்துபிகள் சங்கு குழல்
யாழ் முழவு காமருவு சீர்
மாலைவழி பாடுசெய்து மாதவர்கள்
ஏத்தி மகிழ் மாகறல் உளான்
தோலையுடை பேணியதன் மேலோர் சுடர்
நாகமசையா அழகிதாப்
பாலையன நீறுபுனை வானடியை
ஏத்தவினை பறையும் உடனே. 3

இங்குகதிர் முத்தினொடு பொன்மணிகள்
உந்திஎழில்மெய் உள் உடனே
மங்கையரும் மைந்தர்களு மன்னுபுனலாடி
மகிழ்மாகறல் உளான்
கொங்குவளர் கொன்றைகுளிர் திங்களணி
செஞ்சடையினான் அடியையே
நுங்கள் வினை தீரமிக வேத்தி
வழிபாடு நுகரா எழுமினே. 4

துஞ்சுநறு நீலமிருள் நீங்கவொளி
தோன்றுமது வார்கழனிவாய்
மஞ்சுமலி பூம்பொழிலின் மயில்கள்நட
மாடமலி மாகறல் உளான்
வஞ்சமத யானையுரி போர்த்துமகிழ்
வானொர் மழுவாளன் வளரும்
நஞ்சமிருள் கண்டமுடை நாதனடியாரை
நலியா வினைகளே. 5

மன்னுமறை யோர்களோடு பல்படிம
மாதவர்கள் கூடியுடனாய்
இன்னவகையால் இனி திறைஞ்சி
இமையோரில் எழு மாகறல் உளான்
மின்னனை விரி புன்சடையின் மேல் மலர்கள்
கங்கையோடு திங்கள் எனவே
உன்னுமவர் தொல்வினைகள் ஒல்க உயர்
வானுலகம் ஏறல் எளிதே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யவினை நெறிகள்செல வந்தணையு
மேல்வினைகள் வீட்டலுறுவீர்
மைகொள்விரிகானல்மது வார்கழனி
மாகறல் உளானெழிலதார்
கையகரி கால்வரையின் மேலதுரி
தோலுடைய மேனியழகார்
ஐயனடி சேர்பவரை யஞ்சி
அடையாவினைகள் அகலுமிகவே. 7

தூசுதுகில் நீள்கொடிகள் மேகமொடு
தோய்வன பொன் மாடமிசையே
மாசுபடு செய்கை மிக மாதவர்கள்
ஓதி மலி மாகறல் உளான்
பாசுபத விச்சைவரி நச்சரவு
கச்சையுடை பேணியழகார்பூசு
பொடியீசன் என ஏத்தவினை
நிற்றல் இல போகும் உடனே. 8

தூய விரி தாமரைகள் நெய்தல்
கழுநீர் குவளை தோன்றமதுவுண்
பாயவரி வண்டுபல பண்முரலும்
ஓசை பயில் மாகறல் உளான்
சாயவிரல் ஊன்றிய இராவணன்
தன்மைகெட நின்ற பெருமான்
ஆய புகழ் ஏத்தும் அடியார்கள்வினை
யாயினவும் அகல்வதெளிதே. 9

காலினல பைங்கழல்கள் நீள் முடியின்
மேலுணர்வு காமுறவினார்
மாலும் மலரானும் அறியாமை எரியாகி
உயர் மாகறல் உளான்
நாலுமெரி தோலுமுரி மாமணிய
நாகமொடு கூடியுடனாய்
ஆலும் விடையூர்தியுடை அடிகள் அடி
யாரை அடையாவினைகளே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைகொள் நெடுமாடமிக ஓங்குகமழ்
வீதிமலி காழியவர்கோன்
அடையும்வகை யால் பரவி அரனையடி
கூடுசம் பந்தனுரையால்
மடைகொள்புன லோடுவயல் கூடுபொழில்
மாகறல் உளான் அடியையே
உடைய தமிழ் பத்தும் உணர் வாரவர்கள்
தொல்வினைகள் ஒல்கும் உடனே. 11

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

# பதிகம் 16

## எடுக்கின்ற வேலைகள் இனிதே முடிய பாராயணம் செய்யவேண்டிய பதிகம்

திருஆலவாயில் சமணர்களுடன் வாதிடுவதற்குச் சம்பந்தப் பெருமான் புறப்படும்பொழுது, சொக்கநாதப் பெருமானிடம் சென்று வணங்கிப் பாடியருளிய பதிகமாகும் இப்பதிகம்.

தான் மேற்கொள்ளப்போகும் காரியம் எளிதே, இனிதே முடிந்திட ஆண்டவனின் அருளை வேண்டிநிற்கும் பதிகமாகும். தொழில், வியாபாரம், மற்றும் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் சரி, இப்பதிகத்தைப் பக்தியுடன் பாராயணம் செய்யவேண்டும். அந்தக் காரியம் இனிதே முடியும் என்பது பலர் கண்ட அனுபவ உண்மையாகும்.

இப்பதிகத்தைப் பாடிய பின், சம்பந்தர் சமணர்களுடன் போட்டியிட்டு (அனல்வாதம், புனல்வாதம்) வெற்றி பெற்றதை நாம் யாவரும் அறிந்ததே ஆகும்.

**திருச்சிற்றம்பலம்**

**திருஆலவாய்** **பண் : பழம்பஞ்சரம்**

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி அமணொடு தேரரை
வாதில்வென்றழிக் கத்திருவுள்ளமே
பாதி மாதுடனாய பரமனே
ஞாலம் நின் புகழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதிகத்தின் வழியொழு காதவக்
கைத வம்முடைக் காரமண் தேரரை
எய்தி வாதுசெ யத்திருவுளமே
மைதி கழ்தரு மாமணி கண்டனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே. 2

மறைவ ழக்கமி லாதமா பாவிகள்
பறித லைக்கையர் பாயுடுப் பார்களை
முறிய வாதுசெ யத்திருவுள்ளமே
மறிவு லாங்கையில் மாமழு வாளனே.
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே. 3

அறுத்த அங்கம் ஆறு ஆயின நீர்மையைக்
கறுத்த வாழ் அமண் கையர்கள் தம்மொடும்
செறுத்து வாதுசெயத்திரு வுள்ளமே
முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே.
ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே. 4

அந்தணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த வாதுசெ யத்திரு வுள்ளமே
வெந்த நீற தணியும் விகிர்தனே.
ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே. 5

வேட்டு வேள்வி செயும் பொரு ளைவிளி
மூட்டு சிந்தை முருட்டமண் குண்டரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே
காட்டி லானை உரித்தஎங் கள்வனே.
ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழலது ஓம்பும் அருமறையோர் திறம்
விழல தென்னு மருகர் திறத்திறம்
கழல வாது செயத்திரு வுள்ளமே
தழலி லங்கு திருவுருச் சைவனே.
ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே. 7

நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்
தேற்றி வாதுசெ யத்திரு வுள்ளமே
ஆற்ற வாள ரக்கற்கும் அருளினாய்
ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே. 8

நீலமேணி அமணர் திறத்து நின்
சீலம் வாதுசெயத் திருவுள்ளமே
மாலும் நான்முகனுங் காண்பரியதோர்
கோல மேனிய தாகிய குன்றமே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே. 9

அன்று முப்புரம் செற்ற அழகநின்
துன்று பொற்கழல் பேணா அருகரைத்
தென்ற வாது செயத் திருவுள்ளமே
கன்று சாக்கியர் காணாத் தலைவனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே. 10

கூடல் ஆலவாய்க் கோனை விடை கொண்டு
வாடல்மேனி அமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்த இப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே. 11

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருஆலவாய்** **பண் : புறநீர்மை**

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டி மாதேவி
பணி செய்து நாள்தொறும் பரவப்
பொங்கழல் உருவன் பூதநாயகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாயாவதும் இதுவே.

**திருநல்லூர்ப் பெருமணம்** **பண் : அத்தாளக்குறிஞ்சி**

அன்புறு சிந்தையராகி அடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமணம் மேவி நின்று
இன்புறும் எந்தை இணையடி ஏத்துவார்
துன்புறுவாரல்லர் தொண்டு செய்வாரே.

**திருச்சிற்றம்பலம்**

# திருநாவுக்கரசர் தேவாரம்
# (4-ம் திருமுறை)

## பதிகம் 17

## தீராத வயிற்று வலியை குணமடையச் செய்யும் பதிகம்

திருநாவுக்கரசர் சமண சமயத்திலிருந்து சைவசமயம் சாரவேண்டும். என்று தமக்கையார் வீரட்டானத்துறை பெருமானைப் பலகாலும் வேண்டினார். அவரது அருளால் நாவுக்கரசர் பெருமானுக்குத் தீராத வயிற்றுவலி (சூலை நோய்) வந்தது. இப்பதிகத்தைப் பாடித் தமது சூலை நோயைப் போக்கிக் கொண்டார்.

வயிற்றுவலி கண்டவர்கள் பிறரை ஓதச் செய்வது பலன் அளிக்கும். முடிவில் திருநீறு வயிற்றிலும், நெற்றியிலும் பூசி, ஒரு மிளகளவு உள்ளுக்கும் சாப்பிடலாம். இன்றும் பலர் இப்படிச் செய்து பலனடைந்து வருகின்றார்கள். நாவிற்கு அணிகலன் (ஐந்தெழுத்து) கண்டு, நாவின் மன்னர் என இறைவனால் அழைக்கப்பட்ட திருநாவுக்கரசு சுவாமிகளின் திருவாக்கிலிருந்து முதல் வெளிப்பட்ட பதிகம் இப்பதிகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருச்சிற்றம்பலம்**

**திரு. அதிகைவீரட்டானம்** **பண் : கொல்லி**

கூற்றாயின வாறு விலக்ககலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதி கைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 1

நெஞ்சம் உமக்கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்இது ஒப்பது கண்டறியேன்
வயிற்றொடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலும் என்னீர் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 2

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தே யுமக்காட் செய்து வாழலுற்றாற்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார் பொடிகொண்டு மெய்பூசவல்லீர்
பெற்றமேற்றுகந்தீர் சுற்றும் வெண்டலைக்(கொண்டு)
அணிந்தீர் அடிகேளதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 3

முன்னம் அடியேன் அறியாமையினால்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னை அடியேன் உமக்கு ஆளும் பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னை அடைந்தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தம்கடன் ஆவதுதான்
அன்ன நடையார் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்று சொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புனல் ஆர்அதி கைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 5

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யில்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 6

உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர்தலை காவல் இலாமையினால்
வயந்தே உமக்காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றின் அகம்படியே
பறித்துப்புரட்டி அறுத் தீர்த்திட நான்
அயர்ந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 7

வலித்தேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மனம் ஒன்றும் இலாமையினால்
சலித்தால் ஒருவர்துணை யாருமில்லைச்
சங்க வெண்குழைக் காதுடை யெம்பெருமான்
கலித்தேயென் வயிற்றின் அகம்படியே
கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்து தின்ன
அலுத்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியென்றி வற்றை
நணுகாமல் துரந்து கரந்தும் இடீர்
என்போலிகள் உம்மையினித் தெளியார்
அடியார் படுவதி துவே யாகில்
அன்பே அமையும் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 9

போர்த்தாய் அங்கொர் ஆனையின் ஈருரித்தோல்
புறங்காடரங் காநட மாடவல்லாய்
ஆர்த்தான் அரக்கன்தனை மால்வரைக் கீழ்
அடர்த்திட்டருள் செய்து அது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார் புனல் சூழ்அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 10

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

**திருக்கச்சியேகம்பம்** **பண் : காந்தாரம்**

நல்லானை நல்லான நான்மறையோடு ஆறங்கம்
வல்லானை வல்லார்கண் மனத்துறையும் மைந்தனைச்
சொல்லானைச் சொல்லார்ந்த பொருளானைத் துகளேதும்
இல்லானை எம்மானை என் மனத்தே வைத்தேனே.

# பதிகம் 18

## பிறவிப் பயனைக் கொடுக்கும் பதிகம்

எல்லா சனனங்களையும் தப்பி, மேலான இந்த மானிடப் பிறப்பை எடுத்ததன் நோக்கமே பரம்பொருளை அடைவதற்கே ஆகும். நம்முடைய கருவிகரணங்கள் யாவும் இறை வணக்கத்திற்கே பயன்படல் வேண்டும். அப்பொழுது தான் இந்த சீவன் ஆணவமலம் நீங்கப்பெற்று ''சிவமாக மாறும்.'' இத்தகைய பெரும்பேறு அடைய விரும்பும் சிவநேயச் செல்வர்கள் இப் பதிகத்தைத் தினமும் ஓதி பயன் அடையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருச்சிற்றம்பலம்**

## நாலாம் திருமுறை

**பொது** **பண் : சாதாரி**

தலையே நீ வணங்காய் - தலைமாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத் தலையே நீ வணங்காய் 1

கண்காள் காண்மின்களோ - கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்தோள் வீசிநின் றாடும் பிரான்தன்னைக் கண்காள் காண்மின்களோ 2

செவிகாள் கேண்மின்களோ - சிவன் எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்திறம் எப்போதுஞ் செவிகாள் கேண்மின்களோ 3

மூக்கே நீமுரலாய் - முது காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கே நீமுரலாய் 4

வாயே வாழ்த்து கண்டாய் - மதயானை உரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்தன்னை வாயே வாழ்த்துகண்டாய் 5

நெஞ்சே நீநினையாய் - நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை நெஞ்சே நீ நினையாய் 6

கைகாள் கூப்பித்தொழீர் - கடிமாமலர் தூவி நின்று
பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக் கைகாள் கூப்பித்தொழீர் 7

ஆக்கை யாற்பயனென் - அரன் கோயில் வலம்வந்து
பூக்கை யால் அட்டிப் போற்றி என்னாதஇவ் ஆக்கை யாற்பயனென் 8

கால்களாற்பயனென் - கறைக் கண்டன் உறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக் கால்களாற்பயனென் 9

உற்றார் ஆருளரோ - உயிர்கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தல்அல் லால்நமக் குற்றார் ஆருளரோ 10

இறுமாந்திருப்பன்கொலோ - ஈசன் பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக் கீழ்ச் சென்றங்கு இறுமாந் திருப்பன்
கொலோ 11

தேடிக் கண்டுகொண்டேன் - திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே தேடிக் கண்டு
கொண்டேன் 12

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிகம் 19

## சிவகதியை அளிக்கும் பதிகம்

திருநாவுக்கரசர் பெருமானை சமணர்கள் கல்லுடன் கட்டிக் கடலில் இட்டபொழுது, இப்பதிகத்தைப் பாடியவாறே கரையேறினார். இல்வாழ்வு எனும் கடலில் அழிழ்ந்து விடாமல், 'முத்தி' எனும் கரையை அடைய உதவும் பதிகம் இப்பதிகமாகும். உறங்கப் போகும் பொழுதும், உறங்கி எழும் பொழுதும் நெடுவழிப் பயணம் மேற்கொள்ளும் பொழுதும் இப்பதிகத்தை பாராயணம் செய்யலாம். இறையருள் தோன்றாத் துணையாக அருள் செய்யும் என்பதில் சந்தேகம் வேண்டாம்.

**திருச்சிற்றம்பலம்**

**பொது** **பண் : காந்தாரபஞ்சமம்**

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே. 1

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன் அஞ்சாடுதல்
கோவிலுக் கருங்கலம் கோட்டமில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே. 2

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்றுமில்லையாம்
பண்ணிய உலகினில்பயின்ற பாவத்தை
நண்ணி நின்றறுப்பது நமச்சிவாயவே. 3

இடுக்கண் பட்டிருக்கினும் இரந்துயாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோமல்லோம்
அடுக்கற் கீழ்க் கிடக்கினு மருளின் நாம்உற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே. 4

வெந்த நீறருங்கலம் விரதிகட் கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக் கருங்கலம்திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சிவாயவே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கலால்
நலமிலன் நாடொறும் நல்குவான் நலம்
குலமில ராகிலும்குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே. 6

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச் சென்றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சிவாயவே. 7

இல்லக விளக்கது இருள்கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே. 8

முன்னெறியாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறியே சரணாதல் திண்ணமே
அன்நெறியே சென்றங் கடைந்தவர்க் கெல்லாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே. 9

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவாய பத்து
ஏத்த வல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே. 10

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

**திருப்பழனம்** **பண் : பழந்தக்கராகம்**

மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண் பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானைப்
பண் பொருந்த இசைபாடும் பழனஞ்சேர் அப்பனையென்
கண் பொருந்தும் போதத்தும் கைவிட நான் கடவேனோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிகம் 20

## விடம் தீர்க்கும் பதிகம்

திருநாவுக்கரசர் அப்பூதி அடிகள் வேண்டுதலின் பேரில் அவர் இல்லத்தில் உணவருந்த அமர்ந்தார். வாழை இலை பறிக்கச் சென்ற அப்பூதியடிகளாரின் மூத்த மகன் பாம்பு கடித்து இறந்து விடுகிறான். இதை உணர்ந்த நாவுக்கரசர் இப்பதிகத்தைப் பாடித் திருநீறு அளிக்க இறந்தவன் உறங்கி எழுபவனைப்போல் எழுந்து வந்தான்.

இன்றும் இந்தப் பதிகத்தைப் பலமுறை பாராயணம் செய்து, திருநீறு பூசினால் பாம்பு, பல்லி, தேள் போன்ற விஷக்கடிகள் ஒன்றும் செய்யாது என்பது திண்ணம். திருவருள் நம்மைக் காப்பாற்றும் என்னும் திட நம்பிக்கையுடன் இப்பதிகத்தை ஓதுதல் வேண்டும். பலகாலும் இப்பதிகத்தைப் பாராயணம் செய்தவர்கள் இன்னும் விஷம் தீர்க்கும் வைத்தியம் செய்து வருகின்றார்கள்.

**திருச்சிற்றம்பலம்**

**பொது** **பண் : இந்தளம்**

ஒன்று கொலாம் அவர் சிந்தை உயர்வரை
ஒன்று கொலாம் உயரும் மதி சூடுவர்
ஒன்று கொலாம்இடு வெண்டலை கையது
ஒன்று கொலாம் அவர் ஊர்வது தானே. 1

இரண்டு கொலாம் இமையோர் தொழுபாதம்
இரண்டு கொலாம் இலங்குங்குழை பெண்ணாண்
இரண்டு கொலாம் உருவம் சிறு மான்மழு
இரண்டு கொலாம் அவர் எய்தின தாமே. 2

மூன்று கொலாம் அவர் கண்ணுத லாவன
மூன்று கொலாம் அவர்சூலத்தின் மொய்யிலை
மூன்று கொலாம் கணை கையதுவில் நாண்
மூன்று கொலாம் புரமெய்தன தாமே. 3

நாலு கொலாம் அவர்தம் முகம் ஆவன
நாலு கொலாம் சனனம் முதற் தோற்றமும்
நாலு கொலாம் அவர் ஊர்தியின் பாதங்கள்
நாலு கொலாம் மறை பாடின தாமே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சு கொலாம் அவர் ஆடரவின் படம்
அஞ்சு கொலாம் அவர் வெல் புலனாவன
அஞ்சு கொலாம் அவர் காயப்பட்டான்கணை
அஞ்சு கொலாம் அவர் ஆடின தாமே. 5

ஆறு கொலாம் அவர் அங்கம் படைத்தன
ஆறு கொலாம் அவர்தம் மகனார் முகம்
ஆறு கொலாம் அவர்தார்மிசை வண்டின் கால்
ஆறு கொலாம் சுவை ஆக்கின தாமே. 6

ஏழு கொலாம் அவர் ஊழி படைத்தன
ஏழு கொலாம் அவர்கண்ட இருங்கடல்
ஏழு கொலாம் அவர் ஆளும் உலகங்கள்
ஏழு கொலாம் இசை யாக்கின தாமே. 7

எட்டு கொலாம் அவர் ஈறில் பெருங்குணம்
எட்டு கொலாம் அவர் சூடும் இனமலர்
எட்டு கொலாம் அவர் தோளிணை யாவன
எட்டு கொலாம் திசை யாக்கின தாமே. 8

ஒன்பது போலவர் வாசல் வகுத்தன
ஒன்பது போலவர் மார்பினில் நூலிழை
ஒன்பது போலவர் கோலக் குழற்சடை
ஒன்பது போலவர் பாரிடம் தானே. 9

பத்துக் கொலாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொலாம் எயிறுந்நெரிந் துக்கன
பத்துக்கொலாம் அவர் காயப்பட்டான் தலை
பத்துக்கொலாம் அடியார் செய்கை தானே. 10

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

**திருவாரூர்** **பண் : சீகாமரம்**

பூங்கழல் தொழுதும் பரவியும் புண்ணியா புனிதா உன் பொற்கழல்
ஈங்கு இருக்கப் பெற்றேன் என்ன குறையுடையேன்
ஓங்கு தெங்கு இலையார் கமுகு இளவாழை மாவொடு மாதுளம்பல
தீங்கனி சிதறும் திருவாரூர் அம்மானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருவாரூர்** **பண் : குறிஞ்சி**

முத்துவிதானம் மணிப் பொற்கவரி முறையாலே
பக்தர்களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்.

**கோயில்** **பண் : கொல்லி**

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி
எத்தினாற் பத்தி செய்கேன் என்னை நீ இகழவேண்டா
முத்தனே முதல்வா தில்லை அம்பலத்தாடு கின்ற
அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே.

**திருநேரிசை**

பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டு ஆங்கு ஆர்வத்தை உள்ளேவைத்து
விரும்பி நல்விளக் குத்தூபம் விதியினால் இடவல்லார்க்குக்
கரும்பினில் கட்டி போல்வார் கடவூர் வீரட்டனாரே

ஓம்பினேன் கூட்டை வாளா உள்ளத்து ஓர் கொடுமை வைத்துக்
காம்பிலா மூழைபோலக் கருதிற்றே முகக்க மாட்டேன்
பாம்பின் வாய்த்தேரை போலப் பலபல நினைக்கின்றேனை
ஓம்பி நீ உய்யக் கொள்ளாய் ஒற்றியூர் உடையகோவே.

**திருவிருத்தம்**

முன்னே உரைத்தால் முகமனே ஒக்கும் இம்மூவுலகுக்கு
அன்னையும் அத்தனும் ஆவாய் அழல்வணா நீயலையோ
உன்னை நினைந்தே கழியும் என் ஆவி கழிந்ததற்பின்
என்னை மறக்கப்பொறாய் எம்பிரான் உன்னை வேண்டியதே.

**திருச்சிற்றம்பலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிகம் 21

## என்றும் உணவு கிடைக்கச் செய்யும் பதிகம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தில்லையில் பாடியருளிய இப்பதிகம் மகேஸ்வர பூசையின்போது பாடப்பட்டு வருகிறது. இப்பதிகம் இல்லறத்தார், துறவிகள் ஆகிய யாவராலும் பாராயணம் செய்யப்படவேண்டிய பதிகமாகும். எவ்விதத்திலாவது உணவு கிடைக்க வழி செய்யும் அற்புதப் பதிகம் இப்பதிகமாகும். அவரவர் அனுபவத்தால் அறியலாம்.

திருச்சிற்றம்பலம்

## ஐந்தாம் திருமுறை

### திருக்குறுந்தொகை

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலும் இப்பூமிசை
என்னன் பாலிக்கு மாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே. 1

அரும்பற்றப்பட ஆய்மலர் கொண்டுநீர்
சுரும்பற்றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற்றச் சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற்றப் புலியூர் எம் பிரானையே. 2

அரிச்சுற்ற வினையால் அடர்ப்புண்டு நீர்
எரிச்சுற்றக்கிடந்தார் என்ற யலவர்
சிரிச்சுற்றுப் பல பேசப்படா முனம்
திருச்சிற்றம்பலஞ் சென்றடைந் துய்ம்மினே. 3

அல்லல் என் செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பல வனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே. 4

ஊனின் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம்
நான் நிலாவி யிருப்பான் என் நாதனைத்
தேன் நிலாவிய சிற்றம் பலவனார்
வான் நிலாவி யிருக்கவும் வைப்பரே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்டர் வானவர் சென்று வரங் கொளும்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லும்அச்
சிட்டர்பால் அணுகான் செறு காலனே. 6

ஒத்தனார் உலகங்கட் கொரு சுடர்
திருத்தனார் தில்லைச் சிற்றம் பலவனார்
விருத்தனார் இளையார் விடமுண்ட எம்
அருத்தனார் அடியாரை யறிவரே. 7

விண் நிறைந்ததோர் வெவ்வழலின் உரு
எண் நிறைந்த இருவர்க்கு அறிவொணாக்
கண் நிறைந்த கடி பொழில் அம்பலத்
துள் நிறைந்து நின்றாடும் ஒருவனே. 8

வில்லை வட்டப்பட வாங்கி யவுணர்தம்
வல்லை வட்டம்மதில் மூன்றுடன் மாய்த்தவன்
தில்லை வட்டந்திசை கைதொழுவார் வினை
ஒல்லை வட்டங் கடந்தோடுதல் உண்மையே. 9

நாடி நாரணன் நான்முகன் என்றிவர்
தேடியுந் திரிந்துங் காண வல்லரோ
மாட மாளிகை சூழ் தில்லை யம்பலத்
தாடி பாதம் என் நெஞ்சுள் இருக்கவே. 10

மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம்பலவன் திருமலை
அதிர ஆர்த்தெடுத்தான் முடிபத்து இற
மிதி கொள் சேவடி சென்றடைந் துய்மினே. 11

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

### கோயில் திருக்குறுந்தொகை

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்பவர் மனம்கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்து உய்வனோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஅண்ணாமலை திருக்குறுந்தொகை

வட்டனை மதிசூடியை வானவர்
சிட்டனைத் திரு அண்ணா மலையனை
இட்டனை இகழ்ந்தார் புரம்மூன்றையும்
அட்டனை அடியேன் மறந்து உய்வனோ.

# பதிகம் 22

## பிரசவம் இனிதே ஏற்பட உதவும் பதிகம்

திருச்சிராப்பள்ளி மேவிய பெருமான் தாயாய் வந்து ஏழைப் பெண்ணிற்குப் பிரசவம் பார்த்தவராவார். அவரைப் பற்றிய இப்பதிகம் பிரசவம் சுகமாக நடைபெற உதவும் என்பது பலர் அனுபவத்தால் கண்ட உண்மையாகும். பிரசவத்தில் துன்பம் ஏற்படுங்கால் பூசை அறையில் நம்பிக்கையுடன் இப்பதிகத்தை ஓதி திருநீறு அளித்தால் (அணிந்தும், திருநீற்றை நீரில் சேர்த்து உண்டும்) எளிதாகப் பிரசவம் ஏற்படும். நான்கு பாடல்களே உள்ளன.

திருச்சிற்றம்பலம்

திருச்சிராப்பள்ளி — திருக்குறுந்தொகை

மட்டுவார் குழலா ளொடு மால்விடை
இட்டமா உகந்தேறும் இறைவனார்
கட்டு நீத்தவர்க்கு இன்னருளே செயும்
சிட்டர் போலுஞ் சிராப்பள்ளிச் செல்வரே. 1

அரி அயன் தலை வெட்டி வட்டாடினார்
அரி அயன் தொழு தேத்தும் அரும்பொருள்
பெரிய வன்சிராப்பள்ளியைப் பேணுவார்
அரி அயன் தொழ அங்கிருப் பார்களே. 2

அரிச்சிராப்பகல் ஐவரால் ஆட்டுண்டு
சுரிச்சிராது நெஞ்சே யொன்று சொல்லக் கேள்
திருச்சிராப்பள்ளி யென்றலுந் தீவினை
நரிச்சிராது நடக்கும் நடக்குமே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயுமா யெனக்கே தலை கண்ணுமாய்
பேயனேனையும் ஆண்ட பெருந்தகை
தேயநாதன் சிராப்பள்ளி மேவிய
நாயனார் என நம்வினை நாசமே. 4

# பதிகம் 23

## எமதூதர்கள் வரவிடாமல் தடுக்கும் பதிகம்

அப்பர் அருளிய இப்பதிகம் ''காலபாசத் திருக்குறுந் தொகை'' எனப்படுகிறது. தினமும் சிவனடியார்கள் இப்பதிகத்தைப் பாராயணம் செய்வது நலம் பயக்கும். காலதூதர் நம்மிடம் வராமல் தடுத்து சிவகதியை அளிக்கும் என்பது பாராயணம் செய்தால் உணரலாம். அரிய பதிகம் இப்பதிகம்.

**திருச்சிற்றம்பலம்**

கண்டு கொள்ளரி யானைக் கனிவித்துப்
பண்டு நான்செய்த பாழிமை கேட்டிரேல்
கொண்ட பாணி கொடு கொட்டி தாளங்கைக்
கொண்ட தொண்டரைத் துன்னிலுஞ் சூழலே. 1

நடுக்கத் துள்ளும் நகையுளும் நம்பர்க்குக்
கடுக்கக் கல்லவடம் இடுவார் கட்குக்
கொடுக்கக் கொள்க எனவுரைப் பார்களை
இடுக்கண் செய்யப் பெறீர் இங்கு நீங்குமே. 2

கார்கொள் கொன்றைக் கடிமலர்க் கண்ணியான்
சீர்கொள் நாமம் சிவன் என்று அரற்றுவார்
ஆர்க ளாகிலும் ஆக அவர்களை
நீர்கள் சாரப் பெறீர் இங்குநீங்குமே. 3

சாற்றினேன் சடை நீள்முடிச் சங்கரன்
சீற்றம் காமன்கண் வைத்தவன் சேவடி
ஆற்றவும் களிப் பட்ட மனத்தராய்ப்
போற்றி யென்றுரைப் பார்புடை போகலே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையென் சொல்மறவேல் நமன் தூதுவீர்
பிறையும் பாம்பும் உடைப்பெருமான் தமர்
நறவம் நாறிய நல்நறுஞ் சாந்திலும்
நிறைய நீறணி வார் எதிர் சொல்லலே. 5

வாம தேவன் வளநகர் வைகலும்
காமம் ஒன்றிலராய்க் கைவிளக்கொடு
தாமம் தூபமும் தண்நறுஞ் சாந்தமும்
ஏமமும் புனைவார் எதிர் செல்லே. 6

படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன்மின் நமது ஈசன் அடியரை
விளைகொள் ஊர்தியினான் அடியார்குழாம்
புடைபுகாது நீர்போற்றியே போமினே. 7

விச்சை யாவதும் வேட்கைமை யாவதும்
நீச்சல் நீறணி வாரை நினைப்பதே
அச்சம் எய்தி அருகணையாது நீர்
பிச்சை புக்கவன் அன்பரைப் பேணுமே. 8

இன்னங் கேண்மின் இளம்பிறை சூடிய
மன்னன் பாதம் மனத்துடன் ஏத்துவார்
மன்னும் அஞ்செழுத் தாகிய மந்திரம்
தன்னில் ஒன்று வல்லாரையுஞ் சாரலே. 9

மற்றுங் கேண்மின் மனப்பரிப்பு ஒன்றின்றிச்
சுற்றும் பூசிய நீற்றொடு கோவணம்
ஒற்றை யேறுடையான் அடியே அலால்
பற்று ஒன்றில்லிகள் மேற்படை போகலே. 10

அரக்கன் ஈரைந் தலையுமோர் தாளினால்
நெருக்கி யூன்றிட்டான் தமர் நிற்கிலும்
சுருக்கெனாது அங்குப் போர்மின்கள் மற்று நீர்
சுருக்கெனில் சுடரான் கழல் சுடுமே. 11

**திருச்சிற்றம்பலம்**

(பதிகம் முற்றிற்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தாண்டகம்

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொது நீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே.

நாரணன் காண் நான்முகன்காண் நால்வேதன் காண்
ஞானப் பெருங்கடற்கோர் நாவாய் அன்ன
பூரணன் காண் புண்ணியன் காண் புராணன் தான் காண்
புரிசடைமேல் புனலேற்ற புனிதன் தான் காண்
சாரணன்காண் சந்திரன்காண் கதிரோன் தான் காண்
தன்மைக்கண் தானே காண் தக்கோர்க் கெல்லாம்
காரணன் காண் காளத்தி காணப்பட்ட
கணநாதன்காண் அவன் என் கண்ணுளானே.

மூலநோய் தீர்க்கும் முதல்வன் கண்டாய்
முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்
ஆலின் கீழ் நால்வர்க்கு அறத்தான் கண்டாய்
ஆதியும் அந்தமும் ஆனான் கண்டாய்
பாலவிருத்தனும் ஆனான் கண்டாய்
பவளத் தடவரையே போல்வான் கண்டாய்
மாலைசேர் கொன்றை மலிந்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே.

முத்தினை மணிதன்னை மாணிக்கத்தை
மூவாத கற்பகத்தின் கொழுந்து தன்னைக்
கொத்தினை வயிரத்தைக் கொல்லேர் ஊர்ந்து
கோள் அரவு ஒன்று ஆட்டும் குழகன் தன்னைப்
பத்தனைப் பத்தர் மனத்து ளானைப்
பரிதிபோல் திருமேனி யுடையான் தன்னை
அத்தனை ஆரூரில் அம்மான் தன்னை
அரியாது அடிநாயேன் அயர்த்தவாறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றி நின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னை அல்லால் ஒருதெய்வம் உள்கேன் என்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா என்றும்
பொழில் ஆரூரா என்றே போற்றாநில்லே.

# பதிகம் 24

## எல்லாத் தீவினைகளையும் போக்கி பதி புண்ணியத்தை நல்கும் அற்புதப் பதிகம்

திருநாவுக்கரசு சுவாமிகள் கயிலைப் பரமனைக் காணும் அன்பின் மிகுதியால், உடம்பெல்லாம் தேய கயிலை மலையின் அடி சேர்ந்தார், பரம்பொருள் ஓர் முனிவராகத் தோன்றி, அருகில் உள்ள பொய்கையைக் காட்டி, ''இப்பொய்கையில் மூழ்கி எழுந்து கயிலைக் காட்சியினை திருவையாற்றில் காண்'' என அருளி மறைந்தார். நாவரசரும் அப்பொய்கையில் மூழ்கி ஐயாற்றில் எழுந்து, கயிலாயக் காட்சியினைக் கண்டு தொழுது பாடியருளிய அற்புதமான பதிகமாகும்.

இதைப்போலப் 'போற்றி' பதிகங்கள் பல இருப்பினும், அகத்தியர் திரட்டினுள், அருச்சனைக்கு இத்திருப்பதிகமே தேர்ந்தெடுத்து வைக்கப்பட்டுள்ளதையும் எண்ணிப்பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

எனவே அன்பர்கள் தினமும் இப்பதிகத்தைப் பாராயணம் செய்வது நல்லது. பதி புண்ணியத்தை அளிக்கும். மனம் அமைதி பெறும். தீவினைகள் அகலும்.

**திருச்சிற்றம்பலம்**

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆள் என்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சாடல் பேயோடு உகந்தாய் போற்றி
பிறவி அறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவி யென்சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்றும் எய்தாய் போற்றி
போகாது என்சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

மருவார் புரமூன்றும் எய்தாய் போற்றி
மருவி என் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி ஒளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 3

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்து என்தன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீயாடல் உகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராது என்சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவியான நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவர் அறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாது என் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும் சொல் ஆனாய் போற்றி
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும் தீ ஆனாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

இமையாது உயிராது இருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாக அணைத்தாய் போற்றி
ஊழி ஏழான ஒருவா போற்றி
அமையா அருநஞ்சம் ஆர்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் தொழும் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல்நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகலம் உடையாய் போற்றி
அடியும் முடியும் இகலிப் போற்றி
அங்கு ஒன்று அறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என் சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 10

உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி
ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணார் இசையின் சொல்கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணாய் உலகிற்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 11

(பதிகம் முற்றிற்று)

**திருச்சிற்றம்பலம்**

# பதிகம் 25

## முத்திப் பேற்றை அளிக்கும் உருத்திர திருத்தாண்டகம்

வடமொழி வேதத்தின் இருதயமாக விளங்கும் 'ஸ்ரீருத்திரம்' தமிழ் மொழியில் அப்பர் பெருமானால் நின்ற திருத்தாண்டகமாக அருளப்பட்டுள்ளது. இந்த நின்ற திருத்தாண்டகத்தை 'உருத்திர திருத்தாண்டகம்' என்றே அழைக்கலாம்.

'மறைப்பயன் ஆகிய உருத்திரம்' என்பார் சேக்கிழார் சுவாமிகள். சிவ பெருமானின் விசுவரூபத்தைச் சொற்களால் விவரித்து வணக்கம் கூறுவதே உருத்திரமாகும். இந்த உருத்திரத்தை அல்லும் பகலும் அன்புடன் ஓதி இறைவன் திருவடி அடைந்தவர் உருத்திர பசுபதி நாயனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உருத்திர ஜபத்தினால் பண்டாசுரன் செல்வம், பலம், ஆயுள் எல்லாம் பெற்றான். இந்த உருத்திர ஜபத்தினால் கண்ணபிரான் சிவபெருமானிடமிருந்து 'சுதர்சனம்' பெற்றார்.

இந்த உருத்திர ஜபத்தினால் மார்க்கண்டேயர் என்றும் வாழ்கிறார்.

இந்த உருத்திர மந்திரத்தைத்தான் சனகாதி முனிவர்களே என்றும் ஜபிக்கிறார்கள்.

திருவாரூரில் பிறக்க முத்தி, திருவண்ணாமலையை நினைக்க முத்தி, தில்லையைத் தரிசிக்க முத்தி, இந்த நின்ற திருத்தாண்டகத்தை ஸ்ரீ உருத்திர தாண்டகத்தை அன்புடன் ஓத முத்தி என்பதில் ஐயமில்லை.

இறைவனுக்கு அபிடேகம் செய்யும்பொழுது பாராயணம் செய்யலாம். துன்பத்தை நீக்கி சிவஞானத்தைப் பெற அபாயம் இல்லாத உபாயம் இந்த நின்ற திருத்தாண்டகமேயாகும்.

காசியில் இறக்க முத்தி என்பார்கள். இத்தாண்டகத்தை ஒருமுறை காதலாகிக் கசிந்து, கண்ணீர்மல்க ஓதினாலே முத்தி கிடைக்கும். உபாசனைக்கு உரிய திருத்தாண்டகமாகும்.

## நின்ற திருத்தாண்டகம் (உருத்திர தாண்டகம்)

**திருச்சிற்றம்பலம்**

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எறியும் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாசமாய் அட்டமூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறர் உருவும் தம் உருவும் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே 1

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக்
கலையாகிக் கலைஞானந் தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோர் ஆணுமாகிப்
பிரளயத்துக் கப்பால் ஓர் அண்டமாகி
எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்து மாகி
எழும் சுடராய் எம் அடிகள் நின்றவாறே 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாகிக் களறாகிக் கானு மாகிக்
காவிரியாய் கால் ஆறாய்க் கழியு மாகிப்
புல்லாகிப் புதலாகிப் பூடு மாகிப்
புரமாகிப் புரமூன்றும் கெடுத்தா னாகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளு மாகிச்
சுலாவாகிச் சுலாவுக்கோர் சூழ லாகி
நெல்லாகி நிலனாகி நீரு மாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே 3

காற்றாகிக் கார்முகிலாய்க் காலம் மூன்றாய்க்
கனவாகி நனவாகிக் கங்கு லாகிக்
கூற்றாகிக் கூற்றுதைத்த கொல்களிறு மாகிக்
குரைகடலாய்க் குரைகடற்கோர் கோமானுமாய்
நீற்றானாய் நீறேற்ற மேனி யாகி
நீள்விசும்பாய் நீள்விசும்பின் உச்சி யாகி
ஏற்றானாய் ஏறூர்ந்த செல்வ னாகி
யெழுஞ்சுடராய் எம் அடிகள் நின்ற வாறே 4

தீயாகி நீராகித் திண்மை யாகித்
திசையாகி அத்திசைக்கோர் தெய்வ மாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
தாரகையும் ஞாயிறும் தண்மதியு மாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற
இரதங்கள் நுகர்வானுந் தானே யாகி
நீயாகி நானாகி நேர்மையாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்றவாறே 5

அங்கமாய் ஆதியாய் வேத மாகி
அருமறையோடு ஐம்பூதந் தானே யாகிப்
பங்கமாய்ப் பலசொல்லுந் தானே யாகிப்
பால்மதியோ டாதியாய்ப் பான்மை யாகிக்
கங்கையாய் காவிரியாய்க் கன்னி யாகிக்
கடலாகி மலையாகிக் கழியுமாகி
எங்குமாய் ஏறூர்ந்த செல்வ னாகி
எழுஞ்சுடராய் எம் அடிகள் நின்றவாறே 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதா பிதாவாகி மக்க ளாகி
மறிகடலும் மால்விசும்புந் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகிக்
கொல்புலித் தோல் ஆடைக் குழக னாகிப்
போதாய மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பறுக்கும் புனித னாகி
யாதானும் என நினைந்தார்க்கு எளிதே யாகி
அழல் வண்ண வண்ணர்தாம் நின்றவாறே 7

ஆவாகி ஆவினில் ஐந்து மாகி
அறிவாகி அழலாகி ஆவியுமாகி
நாவாகி நாவுக்கோர் உரையு மாகி
நாதனாய் வேதத்தி னுள்ளோ னாகிப்
பூவாகிப் பூவுக்கோர் நாற்ற மாகிப்
புக்குளால் வாசமாய் நின்றா னாகித்
தேவாகித் தேவர் முதலு மாகிச்
செழுஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்றவாறே 8

நீராகி நீள் அகலம் தானே யாகி
நிழலாகி நீள்விசும்பின் உச்சி யாகிப்
பேராகிப் பேருக்கோர் பெருமை யாகிப்
பெருமதில்கள் மூன்றினையும் எய்தா னாகி
ஆரேனுந் தன்னடைந்தோர் தம்மை யெல்லாம்
ஆட்கொள்ள வல்லஎம் ஈசனார் தாம்
பாராகிப் பண்ணாகிப் பாட லாகிப்
பரஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்ற வாறே 9

மாலாகி நான்முகனாய் மாபூதமாய்
மருக்கமாய் அருக்கமாய் மகிழ்வு மாகிப்
பாலாகி எண்டிசைக்கும் எல்லை யாகிப்
பரப்பாகிப் பரலோகந் தானே யாகிப்
பூலோக புவலோக சுவலோகமாய்ப்
பூதங்களாய்ப் புராணன் தானே யாகி
ஏலாதன வெல்லாம் ஏல்விப் பானாய்
எழுஞ்சுடராய் எம் அடிகள் நின்றவாறே 10
(பதிகம் முற்றிற்று)

**திருச்சிற்றம்பலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய 7ம் திருமுறை

**திருவெண்ணெய்நல்லூர்** **பண் : இந்தளம்**

பித்தாபிறை சூடிபெரு மானே அருளாளா
எத்தால் மறவாதேநினைக் கின்றேன் மனத் துன்னை
வைத்தாய பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருட்துறையுள்
அத்தா உனக்கு ஆளாய்இனி அல்லேன் எனல் ஆமே.

# பதிகம் 26

## பொருள் பெறுதற்கு ஓதவேண்டிய பதிகம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் காஞ்சீபுரத்தில் உள்ள வோணகாந்தன்தளி எனும் ஆலயத்தைத் தரிசித்து, அங்குள்ள பெருமானை உரிமையோடு தோழமைத்திறம், அடிமைத்திறம் முதலியவற்றைக் கூறிப் பொன் வேண்டிப் பாடியருளிய பதிகமாகும் இப்பதிகம். இறைவன் தன் அடியாரிடத்து வைத்துள்ள பேருள் திறத்தையும், அடியார்கட்கு இறைவர் பாட்டு உள்ள உரிமையையும் புலப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ள ஓர் அற்புதப் பதிகமாகும். மனதில் ஓர் உறுதியுடன் நம்பிக்கை வைத்து இப்பதிகத்தை 48 நாட்கள் பாராயணம் செய்து வந்தால், திருவருள் இசைவால் பொருள் பெறுவது சத்தியமாகும். ஐயமே வேண்டாம். பலர் இன்றும் பாராயணம் செய்து பலனடைந்து வருவது கண்கூடாகும்.

**திருச்சிற்றம்பலம்**

**திருவோணகாந்தன் தளி** **பண் : இந்தளம்**

நெய்யும் பாலுந் தயிருங்கொண்டு
நித்தல் பூசனை செய்ய லுற்றார்
கையி லொன்றுங் காண மில்லைக்
கழலடி தொழு துய்யினல்லால்
ஐவர் கொண்டிங்கு ஆட்ட வாடி
ஆழ் குழிப்பட்டழுந்து வேனுக்கு
உய்யுமா றொன் றருளிச் செய்வீர்
ஓண காந்தன் தளியுளீரே. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கள் தங்கு சடைகண் மேலோர்
திரைகள் வந்து புரளவீசும்
கங்கை யாளேல் வாய்திறவாள்
கணபதியேல் வயிறு தாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை
தேவியார் கோற்றட்டி யாளார்
உங்களுக்காட் செய்ய மாட்டோம்
ஓண காந்தன் தளியுளீரே. 2

பெற்ற போழ்தும் பெறாத போழ்தும்
பேணி உம்கழல் ஏத்துவார்கள்
மற்றோர் பற்றிலர் என்றிரங்கி
மதியுடையவர் செய்கை செய்யீர்
அற்ற போழ்தும் அலந்த போழ்தும்
ஆபற்காலத் தடிகேள் உம்மை
ஒற்றி வைத்திங் குண்ண லாமோ
ஓண காந்தன் தளியுளீரே. 3

வல்லதெல்லாம் சொல்லி உம்மை
வாழ்த்தினாலும் வாய்திறந் தொன்
றில்லை என்னீர் உண்டும் என்னீர்
எம்மை ஆள்வான் இருப்ப தென்நீர்
பல்லை உக்க படு தலையிற்
பகல் எலாம் போய்ப் பலிதிரிந்திங்
கொல்லை வாழ்க்கை ஒழிய மாட்டீர்
ஓண காந்தன் தளியுளீரே. 4

கூடிக் கூடித் தொண்டர் தங்கள்
கொண்ட பாணி குறை படாமே
ஆடிப்பாடி அழுது நெக்கங்
கன்புடையவர்க் கின்பம் ஓரீர்
தேடித் தேடித் திரிந்தெய்த் தாலும்
சித்தம் என்பால் வைக்க மாட்டீர்
ஓடிப் போகீர் பற்றுந் தாரீர்
ஓண காந்தன் தளியுளீரே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாருங் குழல் வாள் நெடுங்கண்
மலைமகள் மதுவிம்மு கொன்றைத்
தாரிருந் தடமார்பு நீங்காத்
தையலாள் உலகுய்ய வைத்த
காரிரும் பொழிற் கச்சி மூதூர்க்
காமக் கோட்டம் உண்டாக நீர் போய்
ஊரிடும் பிச்சை கொள்வ தென்னே
ஓண காந்தன் தளியுளீரே. 6

பொய்ம்மை யாலே போது போக்கிப்
புறத்தும் இல்லை அகத்தும் இல்லை
மெய்ம்மை சொல்லி ஆள மாட்டீர்
மேலை நாள் ஒன்றிடவுங் கில்லீர்
எம்மைப் பெற்றால் ஏதும் வேண்டீர்
ஏதுந் தாரீர் ஏதும் ஓதீர்
உம்மையன்றே எம்பெரு மான்
ஓண காந்தன் தளியுளீரே. 7

வலையம் வைத்த கூற்ற மீவான்
வந்து நின்ற வார்த்தை கேட்டுச்
சிலை அமைத்த சிந்தை யாலே
திருவடி தொழுதுய்யின் அல்லால்
கலை அமைத்த காமச் செற்றக்
குரோத லோப மதவரூடை
உலை அமைத்திங் கொன்ற மாட்டேன்
ஓண காந்தன் தளியுளீரே. 8

வாரமாகித் திருவடிக்குப்
பணி செய் தொண்டர் பெறுவதென்னே
ஆரம்பாம்பு வாழ்வ தாரூர்
ஒற்றி யூரேல் உம்மதன்று
தாரமாகக் கங்கை யாளைச்
சடையில் வைத்த அடிகேள் உந்தம்
ஊரும் காடு உடையும் தோலே
ஓண காந்தன் தளியுளீரே. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவணம் மேல் எருதொன்றேறும்
        ஓண காந்தன் தளியுளார் தாம்
ஆவணஞ்செய் தாளுங் கொண்டு
        அரை துகிலொடு பட்டுவீக்கிக்
கோவணம் மேற்கொண்ட வேடம்
        கோவையாக ஆரூரன் சொன்ன
பாவணத் தமிழ் பத்தும் வல்லார்க்குப்
        பறையுந் தாஞ்செய்த பாவந் தானே. 10

(பதிகம் முற்றிற்று)

**திருச்சிற்றம்பலம்**

# பதிகம் 27

## கண் பார்வை பெற உதவும் பதிகம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருஒற்றியூரில் சங்கிலி நாச்சியாரை இரண்டாவதாகத் திருமணம் புரிந்து கொள்கிறார். அவ்வாறு மணம் புரியும் பொழுது சங்கிலியாரை விட்டுப பிரியேன் என்று சத்தியமும் செய்து கொடுக்கிறார். காலம் செல்கிறது. திருவாரூர் பெருமானைக் கண்டு வணங்கும் ஆசை மிகுகிறது சுந்தரமூர்த்தி நாயனாருக்கு.

திருஒற்றியூரை விட்டுப் புறப்படுகிறார். எல்லையைத் தாண்டிய உடன் கண்களை இழந்து விடுகிறார். காஞ்சீபுரம் வருகிறார். அங்குள்ள திருவேகம்பப் பெருமானை வேண்டி, இப்பதிகத்தைப் பாடி கண் பார்வை பெறுகிறார்.

இப்பதிகம் கண் ஒளியை அளிக்கும் மேலான பதிகமாகும். பல அன்பர்கள் முழு நம்பிக்கையுடன் ஓதி கண்பார்வையைப் பெறறுள்ளார்கள்.

**திருச்சிற்றம்பலம்**

**திருக்கச்சியேகம்பம்** **பண் : தக்கேசி**

ஆலந்தான் உகந்து அமுது செய்தானை
        ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான பெரிதும் உடையானைச்
        சிந்திபபார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
        என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பன் எம்மானைக்
        காணக் கண் அடியேன் பெற்றவாறே. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றவர்க்குதவும் பெரு மானை
ஊர்வதொன்றுடை யான் உம்பர் கோனைப்
பற்றினார்க் கென்றும் பற்றவன் தன்னைப்
பாவிப்பார் மனம் பாவிக் கொண்டானை
அற்றமில் புகழாள் உமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கற்றைவார் சடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 2

திரியும் முப்புரந் தீப்பிழம்பாகச்
செங்கண் மால்விடை மேல் திகழ்வானைக்
கரியின் ஈருரி போர்த்துகந்தானைக்
காமனைக் கனலா விழித்தானை
வரிகொள் வெள்வளையாள் உமை நங்கை
மருவி ஏத்தி வழி படப்பெற்ற
பெரிய கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 3

குண்ட லம்திகழ் காதுடை யானைக்
கூற்று தைத்த கொடுந்தொழிலானை
வண்டலம்பு மலர்க் கொன்றையினானை
வாளராமதி சேர் சடையானைக்
கொண்டையந்தடங் கண்உமை நங்கை
கெழுமி யேத்தி வழி படப் பெற்ற
கண்டம் நஞ்சுடைக் கம்பனெம்மானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே. 4

வெல்லும் வெண்மழு ஒன்றுடையானை
வேலை நஞ்சுண்ட வித்தகன் தன்னை
அல்லல் தீர்த்தருள் செய்ய வல்லானை
அருமறையவை அங்கம் வல்லானை
எல்லையில் புகழாளுமை நங்கை
யென்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கள் தங்கிய சடையுடை யானைத்
தேவ தேவனைச் செழுங் கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடையானைச்
சாம வேதம் பெரிதுகப்பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி யேத்தி வழி படப் பெற்ற
கங்கையாளனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே. 6

விண்ணவர் தொழுதேத்த நின்றானை
வேதம் தான் விரித்து ஓதவல்லானை
நண்ணினார்க் கென்றும் நல்லவன் தன்னை
நாளும் நாம் உகக்கின்ற பிரானை
எண்ணில் தொல்புகழாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்றுடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்ற வாறே. 7

சிந்தித் தென்றும் நினைந்தெழுவார்கள்
சிந்தையில் திகழும் சிவன் தன்னைப்
பந்தித்தவினைப் பற்றறுப் பானைப்
பாலொடானஞ்சும் ஆட்டுகந் தானை
அந்தமில் புகழாள் உமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கந்தவார் சடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 8

வரங்கள் பெற்றுழல் வாள ரக்கர் தம்
வாலிய புரம் மூன்றெரித் தானை
நிரம்பிய தக்கன் தன்பெரு வேள்வி
நிரந்தரஞ் செய்த நிர்க்கண்டகனைப்
பரந்த தொல்புகழாள் உமைநங்கை
பரவி ஏத்தி வழி படப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எள்கல் இன்றி இமையவர் கோனை
ஈசனை வழிபாடு செய்வாள் போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே. 10

பெற்றம் ஏறுகந் தேறவல் லானைப்
பெரிய எம்பெருமான் என்றெப்போதும்
கற்றவர் பரவப்படு வானைக்
காணக் கண் அடியேன் பெற்றதென்று
கொற்றவன் கம்பன் கூத்தன் எம்மானைக்
குளிர்பொழில் திருநாவல் ஆரூரன்
நற்றமிழ் இவை ஈரைந்தும் வல்லர்
நன்னெறி உலகெய்துவர் தாமே. 11

(பதிகம் முற்றிற்று)

**திருச்சிற்றம்பலம்**

# பதிகம் 28

## திருட்டு போன பொருள்கள் கிடைக்க உதவும் பதிகம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமான் நாயனாருடன் பல தலங்களை வழிபட்டு, திருவாரூர் தரிசிக்கப் புறப்பட்டு வருகின்றார். சேரமான் நவமணிகள், பொன் முத்துக்கள் ஆகியவற்றை ஏவலாளர் தலையின் மீது ஏற்றி உடன் அனுப்புகின்றார். வழியில் திருமுருகன் பூண்டிக்கு அருகில் சிவபெருமான் பூதகணங்களை வேடர்களாக்கி அந்த மூட்டைகளைக் கவர்ந்து வருமாறு அருளுகிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமுருகன் பூண்டி ஆலயத்திற்குள் சென்று இப்பதிகம் பாட, எல்லாப் பொருள்களையும் சிவபெருமான் (சுந்தரருக்கு) சிவ கணங்கள் மூலம் அளிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு இப்பதிகம் கிடைத்து, நாமும் களவு போகும் பொருட்களை மீண்டும் பெறுவதற்காகவே திருவருள் இந்தத் திருவிளையாடலைச் செய்தது என்று உணர வேண்டும். எனவே, இப்பதிகத்தை முழு நம்பிக்கையுடன் பாராயணம் செய்தால், களவு போன பொருட்கள் மீண்டும் கிடைப்பது சத்தியமாகும். இதற்கு எத்தனையோ அனுபவங்கள் உள்ளன.

**திருச்சிற்றம்பலம்**

**திருமுருகன் பூண்டி** **பண் : பழம்பஞ்சுரம்**

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்
விரவலாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண்டு
ஆறலைக்குமிடம்
முடுகு நாறிய வடுகர் வாழ்முருகன்
பூண்டி மாநகர்வாய்
இடுக நுண்ணிடை மங்கை தன்னோடும்
எத்துக்கிங் கிருந்தீர் எம்பிரானீரே. 1

வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர்
விரவலாமை சொல்லிக்
கல்லினால் எறிந்திட்டும் மோதியுங்
கூறை கொள்ளுமிடம்
முல்லைத்தாது மணங்கமழ் முருகன்
பூண்டி மாநகர் வாய்
எல்லைக் காப்பதொன் றில்லையாகில் நீர்
எத்துக்கிங் கிருந்தீர் எம்பிரானீரே. 2

பசுக்களே கொன்று தின்று பாவிகள்
பாவம் ஒன்றறியார்
உசிர்க் கொலை பல நேர்ந்து நாள்தொறும்
கூறை கொள்ளுமிடம்
முசுக்கள் போற்பல வேடர் வாழ் முருகன்
பூண்டி மாநகர் வாய்
இசுக்கழியப் பயிக்கங் கொண்டு நீர்
எத்துக்கிங் கிருந்தீர் எம்பிரானீரே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீறற்கூறை உடுத்தொர் பத்திரங்
கட்டி வெட்டினராய்ச்
சூறைப் பங்கிய ராகி நாள்தொறுங்
கூறை கொள்ளுமிடம்
மோறை வேடுவர் கூடி வாழ்முருகன்
பூண்டி மாநகர்வாய்
ஏறு கால் இற்ற தில்லையாய்விடில்
எத்துக்கிங் கிருந்தீர் எம்பிரானீரே. 4

தயங்கு தோலை உடுத்துச் சங்கர
சாம வேதமோதி
மயங்கி ஊரிடும் பிச்சை கொண்டுணும்
மார்க்க மொன்றறியீர்
முயங்கு பூண்முலை மங்கை யாளொடு
முருகன் பூண்டி மாநகர் வாய்
இயங்கவும் மிடுக்குடையராய் விடில்
எத்துக்கிங் கிருந்தீர் எம்பிரானீரே. 5

விட்டிசைப்பன கொக்கரை கொடு
கொட்டி தத்தளகம்
கொட்டிப் பாடுமித் துந்துமியொடு
குடமுழா நீர்மகிழ்வீர்
மொட்டலர்ந்து மணங் கமழ் முருகன்
பூண்டி மாந கர்வாய்
இட்டபிச்சை கொண்டுண்ப தாகில்நீர்
எத்துக்கிங் கிருந்தீர் எம்பிரானீரே. 6

வேதமோதி வெண்ணீறு பூசி வெண்
கோவணந் தற்றயலே
ஓதமேவிய ஒற்றி யூரையும்
உத்திர நீர் மகிழ்வீர்
மோதி வேடுவர் கூறை கொள்ளு முருகன்
பூண்டி மாநகர் வாய்
ஏதுகாரணம் ஏதுகாவல் கொண்டு
எத்துக்கிங் கிருந்தீர் எம்பிரானீரே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவரவு நுண்ணேரிடைப் பணைத்
    தோள் வரிநெடுங்கண்
மடவரல் உமை நங்கை தன்னையொர்
    பாகம் வைத்துகந்தீர்
முடவரல்லீர் இடரிலீர் முருகன்
    பூண்டி மாநகர்வாய்
இடவமேறியும் போவதாகில் நீர்
    எத்துக்கிங் கிருந்தீர் எம்பிரானீரே. 8

சாந்த மாகவெண் ணீறுபூசிவெண்
    பல்தலைகலனா
வேய்ந்த வெண்பிறைக் கண்ணி தன்னையோர்
    பாகம் வைத்து கந்தீர்
மோந்தை யோடு முழக்கறா முருகன்
    பூண்டிமா நகர்வாய்
ஏந்துபூண்முலை மங்கை தன்னோடும்
    எத்துக்கிங் கிருந்தீர் எம்பிரானீரே. 9

முந்திவானவர் தாந்தொழும் முருகன்
    பூண்டிமா நகர்வாய்
பந்தணைவிரற் பாவை தன்னையோர்
    பாகம் வைத்தவனைச்
சிந்தையிற்சிவ தொண்டனூரன்
    உரைத்தன பத்துங்கொண்(டு)
எந்தம் அடிகளை ஏத்துவார் இட
    ரொன்றுந்தாமி லரே. 10

(பதிகம் முற்றிற்று)

**திருச்சிற்றம்பலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிகம் 29

## சொறி, படை, மேகம், அம்மை போன்ற உடற்பிணிகளைப் போக்கும் பதிகம்

சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு உடல், நோய் வாய்ப்பட்டு வருத்துகின்றது. திருத்துருத்தியடைந்து உடற்பிணி நீக்கியருளும் படி பெருமானை வேண்டுகின்றார். அவ்வாறே உடற்பிணியும் நீங்குகின்றது. தூய உடம்பினைப் பெற்று இப்பதிகம் பாடியருளுகின்றார் நாயனார்.

மேலே கூறிய நோயினை உடைய அன்பர்கள், தினமும் இப்பதிகத்தை அன்புடன் ஓதி, முடிவில் உடம்பு முழுவதும் 'சிவாயநம' என்று சொல்லி 'திருநீறு' பூசிவரவும், 48 நாட்களுக்குள் நோய் நீங்கி தூய உடம்பினைப் பெறுவார்கள் என்பது அனுபவத்தால் கண்ட உண்மையாகும்.

**திருச்சிற்றம்பலம்**

**திருத்துருத்தியும் - திருவேள்விக் குடியும்** **பண் : காந்தாரம்**

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடிபடக் கரையொடுந்திரைகொணந் தெற்றும்
அன்னமாங் காவிரி அகன்கரை யுறைவார்
அடியினை தொழுதெழும் அன்பராம் அடியார்
சொன்ன வாறறிவார் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
என்னைநான் மறக்குமா றெம்பெரு மானை
என்னுடம்பு அடும்பிணி இடர் கெடுத்தானை. 1

கூடுமா றுள்ளன கூடியுங் கோத்துங்
கொய்புன ஏனலோ டைவனஞ் சிதறி
மாடுமா கோங்கமே மருதமே பொருது
மலையெனக் குலைகளை மறிக்குமா றுந்தி
ஓடுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
பாடுமா றறிகிலேன் எம்பெரு மானைப்
பழவினை யுள்ளன பற்றறுத் தானை. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லுமால் யானையின் கொம்பொடு வம்பார்
கொழுங்கனிச் செழும்பயன் கொண்டு கூட்டெய் திப்
புல்கியுந் தாழ்ந்தும் போந்து தவஞ்செய்யும்
போகரும் யோகரும் புலரிவாய் மூழ்கச்
செல்லுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
சொல்லுமா றறிகிலேன் எம்பெரு மானைத்
தொடர்ந்திடுங் கடும்பிணித் தொடர்வறுத்தானை. 3

பொறியுமா சந்தனத் துண்டமோ டகிலும்
பொழிந்திழிந் தருவிகள் புன்புலங் கவரக்
கறியுமா மிளகொடு கதலியும் உந்திக்
கடலுற விளைப்பதே கருதித்தன் கைபோய்
எறியுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
அறியுமா றறிகிலேன் எம்பெரு மானை
யருவினை யுள்ளன ஆசறுத் தானை. 4

பொழிந்திழி மும்மதக் களிற்றின மருப்பும்
பொன்மலர் வேங்கையின் நன்மலர் உந்தி
இழிந்திழிந் தருவிகள் கடும்புனல் ஈண்டி
எண்டிசை யோர்களும் ஆடவந் திங்கே
சுழிந்திழி காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
ஒழிந்திலேன் பிதற்றுமா றெம்பெரு மானை
உற்றநோய் இற்றையே உறவொழித்தானை. 5

புகழுமா சந்தனத் துண்டமோ டகலும்
பொன்மணி வரன்றியும் நன்மலர் உந்தி
அகழுமா அருங்கரை வளம்படப் பெருகி
ஆடுவார் பாவந்திழ்த தஞ்சனம் அலம்பித்
திகழுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
இகழுமா றறிகிலேன் எம்பெரு மானை
இழிந்த நோய் இம்மையே ஒழிக்க வல்லானை. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையின்மாங் கனியொடு வாழையின் கனியும்
வருடியும் வணக்கியும் மராமரம் பொருதும்
கரையுமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க்
காம்பீலி சுமந்தொளிர் நித்திலங் கைபோய்
விரையுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
உரையுமா றறிகிலேன் எம்பெரு மானை
உலகறி பழவினை அறவொழித் தானை 7

ஊருமா தேசமே மனமுகந் துள்ளிப்
புள்ளினம் பல படிந் தொண்கரை உகளக்
காருமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க்
கவரிமா மயிர்சுமந்து ஒண்பளிங் கிடறித்
தேருமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
ஆருமா றறிகிலேன் எம்பெருமானை
அம்மை நோய் இம்மையே ஆசறுத் தானை. 8

புலங்களை வளம்படப் போக்கறப் பெருகிப்
பொன்களே சுமந்தெங்கும் பூசல்செய் தார்ப்ப
இலங்குமா முத்தினோ டினமணியிடறி
யிருகரைப் பெருமரம் பீழ்ந்து கொண்டெற்றிக்
கலங்குமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
விலங்குமா றறிகிலேன் எம்பெரு மானை
மேலைநோய் இம்மையே விடுவித் தானை. 9

மங்கையோர் கூறுகந் தேறுகந் தேறி
மாறலார் திரிபுரம் நீறெழச் செற்ற
அங்கையான் கழலடி அன்றி மற்றறியான்
அடியவர்க் கடியவன் தொழுவன் ஆரூரன்
கங்கையார் காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் சேர்த்திய பாடல்
தங்கையால் தொழுது தம்நாவின் மேற்கொள்வார்
தவநெறி சென்று அமர் உலகம் ஆள்பவரே. 10

(பதிகம் முற்றிற்று)

**திருச்சிற்றம்பலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாசகப் பெருமான் அருளிய 8 ம் திருமுறை

மாணிக்க வாசகப் பெருமான் அருளிய திருவாசகம் கருங்கல் மனங்களையும் கரையச் செய்யும் தகைமை உடையது. திருவாசகம் எனும் எட்டாம் திருமுறையின் முதற்பாடல் சிவபுராணம் என்பதாகும்.

# பதிகம் 30

## மனக்கவலை நீக்க வல்லது ஆனந்தம் அளிப்பது

இந்தச் சிவபுராணத்தை அன்பர்கள் பூசையின்போது, காலையும், மாலையும் பாராயணம் செய்யலாம். வீதிவலம், மலைவலம், ஆலய வழிபாடு, மகேஸ்வர பூசை முதலிய காலங்களில் பாராயணம் செய்யலாம். இதனால் குடும்பங்களில் ஏற்படும் குழப்பங்கள், மனக்கவலைகள், யாவும் ஒழிந்து, அமைதியும் ஆனந்தமும் உண்டாகும். இச் சிவபுராணத்திற்கு இணை இதுவேயாகும். இப்பூவுலக மக்கள் உய்யும் பொருட்டு சிவபெருமானே மாணிக்க வாசகர் மூலம் இதனை அருளிச் செய்தார் என உணர்க.

வீட்டில் உள்ளவர்களே சேர்ந்து தினமும் இப்பாடலை, காலையும் மாலையும் பாராயணம் செய்வது மிகுந்த பயனை நல்கும். வீடு லட்சுமி வசிக்கும் இடமாகத் திகழும் என்பது உண்மை.

### சிவபுராணம்

**திருச்சிற்றம்பலம்**

**ராகம் : மோகனம்**

நமச்சிவாய வா அழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்றஇத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்ய விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தோனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவில்லாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

(பதிகம் முற்றிற்று)

**திருச்சிற்றம்பலம்**

# பதிகம் 31

## விரோதிகளை அடங்கச் செய்து வெற்றியை நல்கும் பதிகம்

'திருவுந்தியார்' எனப்படும் இந்த இருபது பாடல்களிலும், சிவபெருமானது வெற்றியே கூறப்பட்டுள்ளது. 'வாழ்த்துவதும்' வானவர்கள் தாம் வாழ்வதற்கே என்பது போல, சிவபெருமானது வெற்றியையே பாடி நாமும் வெற்றியே பெறுவோம். இதில் ஐயமே வேண்டாம். பகைமை, விரோதம் யாவும் நீங்கி நலம் பெற இப்பதிகம் பெரிதும் உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லை | ராகம் : மோகனம்

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தனமுப்புரம் உந்தீ பற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீ பற. 1

ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீ பற
ஒன்றும் பெருமிகை உந்தீ பற. 2

தச்சு விடுத்தலும் தாம் அடியிட்டலும்
அச்சு முறிந்ததென்று உந்தீ பற
அழிந்தன முப்புரம் உந்தீ பற. 3

உய்யவல்லார் ஒருமூவரைக் காவல் கொண்டு
எய்ய வல்லானுக்கே உந்தீ பற
இளமுலை பங்கன் என்றுந்தீ பற. 4

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடியவா பாடி உந்தீ பற
உருத்திர நாதனுக் குந்தீ பற. 5

ஆவா திருமால் அவிப்பாகங் கொண்டு அன்று
சாவாது இருந்தான் என்று (உ)ந்தீ பற
சதுர்முகன் தாதை என்று (உ)ந்தீ பற. 6

வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தான் என்று (உ)ந்தீ பற
கலங்கிற்று வேள்வி என்று (உ)ந்தீ பற. 7

பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேஏடி உந்தீ பற
பணைமுலை பாகனுக்கு (உ)ந்தீ பற. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரந்தரனார் ஒரு பூங்குயிலாகி
மரந்தனில் ஏறினார் உந்தீ பற
வானவர் கோன் என்றே உந்தீ பற. 9

வெஞ்சின வேள்வி வியாத்திர னார்தலை
துஞ்சின வாபாடி உந்தீ பற
தொடர்ந்த பிறப்பற உந்தீ பற. 10

ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி உந்தீ பற
கொங்கை குலுங்கநின்று (உ)ந்தீ பற. 11

உண்ணப் புகுந்த பகன்ஒளித்து ஓடாமே
கண்ணைப் பறித்தவாறு (உ)ந்தீ பற
தொல்லை வினைகெட உந்தீ பற. 12

நாமகள் நாசி சிரம்பிர மன்படச்
சோமன் முகம்நெரித்து (உ)ந்தீ பற
தொல்லை வினைகெட உந்தீ பற 13

நான்மறை யோனும் மகத்துஇய மான்படப்
போம்வழி தேடுமாறு (உ)ந்தீ பற
புரந்தரன் வேள்வியில் உந்தீ பற. 14

சூரிய னார் தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவாறு (உ)ந்தீ பற
மயங்கிற்று வேள்வி என்று (உ)ந்தீ பற. 15

தக்கனார் அன்றே தலைஇழந் தார்தக்கன்
மக்களைச் சூழநின்று (உ)ந்தீ பற
மடிந்தது வேள்வி என்று (உ)ந்தீ பற. 16

பாலக னார்க்கு அன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீ பற
குமரன் தன் தாதைக்கே உந்தீ பற. 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல மலரின்மேல் நான்முக னார்தலை
ஒல்லை அரிந்ததுஎன்று (உ)ந்தீ பற
உகிரால் அரிந்ததுஎன்று (உ)ந்தீ பற. 18

தேரை நிறுத்தி மலைஎடுத் தான்சிரம்
ஈரைந்தும் இற்றவாறு (உ)ந்தீ பற
இருபதும் இற்றதென்று (உ)ந்தீ பற. 19

ஏகாசமிட்ட இருடிகள் போகாமல்
ஆகாசங் காவலென் றுந்தீ பெற
அதற் கப்பாலுங் காவல் என்றுந்தீ பற. 20

(பதிகம் முற்றிற்று)

**திருச்சிற்றம்பலம்**

# பதிகம் 32

## ஊமை, திக்குவாய் முதலியன நீங்கி நன்றாகப் பேச உதவும் பதிகம்

மாணிக்கவாசகப் பெருமான் தில்லையில், ஊருக்கு வெளியே தங்கி இருக்கின்றார். ஈழநாட்டு அரசன், அவனது ஊமை மகள், பௌத்த குரு ஆகியவர்கள் தில்லைவாழ் அந்தணர்களுடன் சமய வாதம் செய்ய வருகின்றார்கள். நடராசப் பெருமான் அந்தணர்களின் கனவிலே தோன்றி, ஊருக்கு வெளியே உறையும் மணிவாசகரை அழைத்து வந்து வாது புரி என அருளி மறைந்தார். அவ்வாறே மணிவாசகப் பெருமானும் அழைத்து வரப்பட்டு சமய வாதம் செய்கிறார். அச்சமய வாதத்தின்போது அருளிய பதிகம் தான் திருச்சாழல் என்னும் இப்பதிகம். இப்பதிகம் பாடி, ஈழநாட்டு அரசனின் பிறவி ஊமை மகளை பேசவைத்து அற்புதத்தை நிகழ்த்துகிறார் மணிவாசகர்.

மருத்துவர்கள் கைவிட்டு விட்டபொழுது கைவிடாது காக்கும் இப் பதிகம். மனதில் ஓர் உறுதியை ஏற்படுத்திக் கொண்டு, ஒரு மண்டலம் இப்பதிகத்தைப் பாராயணம் செய்து, ஊமையாக உள்ளவர்களின் நாவில் திருநீற்றைத்தடவி வர, ஊமைத் தன்மை நீங்கும் என்பதை அவரவர் அனுபவத்தால் உணரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தில்லை திருச்சாழல்** **ராகம் : மோகனம்**

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ. 1

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தான்ஈசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. 2

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான் தனியேன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான் தனியேன் ஆயிடினும்
காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ. 3

அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ. 4

தக்கனையும் எச்சனையும் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலத்ததுதான் என்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி அருள்கொடுத்தங்கு
எச்சனுக்கு மிகைத்தலை மற்று அருளினன் காண் சாழலோ. 5

அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவரும்தம்
சலமுகத்தால் ஆங்காரந் தவிரார்காண் சாழலோ. 6

மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன் சடையில் பாயுமது என்னேடீ
சலமுகத்தால் அவன்சடையிற் பாய்ந்திலனேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றுஎழுந்த
ஆலாலம் உண்டான் அவன் சதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்று அயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. 8

தென்பால் உகந்து ஆடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ. 9

தான் அந்த மில்லான் தனை அடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்குஓர் வான் பொருள்காண் சாழலோ. 10

நங்காய் இது என்னதவம் நரம்போடு எலும்பு அணிந்து
கங்காளம் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந் தரத்துஇருவர்
தங்காலம் செய்யத் தரித்தனன்காண் சாழலோ. 11

கானார் புலித்தோல் உடைதலை ஊண் காடுபதி
ஆனால் அவனுக்குஇங்கு ஆட்படுவார் ஆரேடீ
ஆனாலும் கேளாய் அயனும் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ. 12

மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளாது ஒழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாம் கலங்கிடும்காண் சாழலோ. 13

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச் சிற்றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ!
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக்கு ஊட்டு ஆம் காண் சாழலோ. 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடகரியும் பரிமாவும் தேரும் உகந்து ஏறாதே
இடபம் உகந்து ஏறியவாறு எனக்கறிய இயம்பேடீ!
தடமதில்கள் அவைமூன்றும் தழல்எரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ. 15

நன்றாக நால்வர்க்கு நான் மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங்கு அறம் உரைத்தான் காணேடி
அன்று ஆலின் கீழ் இருந்தங்கு அறம் உரைத்தான் ஆயிடினும்
கொன்றான் காண் புரமூன்றும் கூட்டோடே சாழலோ. 16

அம்பலத்தே கூத்தாடி அமுது செயப் பலிதிரியும்
நம்பனையும்தேவன் என்று நண்ணுமது என்னேடீ!
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாம் அறியா
எம்பெருமான் ஈசா என்று ஏத்தினகாண் சாழலோ. 17

சலமுடைய சலந்தரன்தன் உடல்தடித்த நல்லாழி
நலமுடைய நாரணர்க்கு அன்று அருளியவாறு என்னேடீ!
நலமுடைய நாரணன் தன் நயனம் இடந்து அரனடிக்கீழ்
அலராகஇட ஆழி அருளினன்காண் சாழலோ. 18

அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமான் உண்டசதுர் எனக்கு அறிய இயம்பேடீ!
எம்பெருமான் ஏதுஉடுத்தங்கு ஏது அமுது செய்திடினும்
தம்பெருமை தான் அறியாத் தன்மையன்காண் சாழலோ. 19

அருந்தவருக்கு ஆலின்கீழ் அறம்முதலா நான்கனையும்
இருந்தவருக்கு அருளுமது எனக்கறிய இயம்பேடீ!
அருந்தவருக்கு அறமுதல் நான்கு அன்று அருளிச்
செய்திலனேல்
திருந்தவருக்கு உலகியற்கை தெரியாகாண் சாழலோ. 20

(பதிகம் முற்றிற்று)

**திருச்சிற்றம்பலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோயில் மூத்த - திருப்பதிகம்**

நல்காது ஒழியான் நமக்கென்றுன்
 நாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தவா வாய் குழறா
 வணங்கா மனத்தால் நினைந்துருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப்
 பரவிப் பொன்னம்பலம் என்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கு இரங்கி
 அருளாய் என்னை உடையானே.

**யாத்திரைப் பத்து**

அடியார் ஆனீர் எல்லீரும்
 அகல விடுமின் விளையாட்டைக்
கடிசேர் அடியே வந்தடைந்து
 கடைக் கொண் டிருமி திருக்குறிப்பைச்
செடிசேர் உடலைச் செலநீக்கிச்
 சிவலோகத்தே நமை வைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன் தன்
 பூவார் கழற்கே புகவிடுமே.

# ஒன்பதாம் திருமுறை

## திருவிசைப்பா

**திருச்சிற்றம்பலம்**

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
 உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே!
 சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே!
 அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
 தொண்டனேன் விளம்புமா விளம்பே. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பரம் பொருளே! சசிகண்ட சிகண்டா
 சாமகண்டா! அண்டவாணா!
நற்பெரும் பொருளாய்! உரைகலந்து உன்னை
 என்னுடை நாவினால் நவில்வான்
அற்பன் என உள்ளத்து அளவிலா உன்னைத்
 தந்த பொன்னம்பலத் தரசே!
கற்பமாய், உலகாய், அல்லை ஆனாயைத்
 தொண்டனேன் கருதுமா கருதே. 2

நீறணி பவளக் குன்றமே! நின்ற
 நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே! யோக
 வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடை எம் அற்புதக் கூத்தா!
 அம்பொன் செய் அம்பலத் தரசே!
ஏறணி கொடி எம் ஈசனே! உன்னைத்
 தொண்டனேன் இசையுமாறு இசையே. 3

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
 கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
 மதிப்பவர் மன மணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
 திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
 குளிர என் கண் குளிர்ந்தனவே. 4

# ஒன்பதாம் திருமுறை

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பத்தர்கள்
 வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனி யெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறி தந்த பித்தர்க்குப்
பல்லாண்டு கூறுதுமே. 1

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு
ஆட்செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவில்ல தோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே. 2

புரந்தரன் மால் அயன் பூசலிட்டு ஓலமிட்டு
இன்னம் புகலரிதாய்
இரந்து இரந்து அழைப்ப என்னுயிர் ஆண்ட
கோவினுக்கு என் செய வல்லம் என்றும்
கரந்தும் கரவாத கற்பகனாகி
கரையில் கருணைக் கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலா பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே. 3

தாதையைத் தாள் அற வீசிய சண்டிக்கு
அவ்வண்டத் தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போனகமும் அருளிச்
சோதி மணி முடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழல் ஒலி யாழ்ஒலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழ வொலி விண்ணளவும் சென்று விம்மி
மிகு திருவாரூரின்
மழவிடையார்க்கு வழி வழி ஆளாய்
மணஞ்செய் குடிப் பிறந்த
பழ அடியாரொடுங் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 5

திருச்சிற்றம்பலம்

# பத்தாம் திருமுறை

## திருமூலமந்திரம்

திருச்சிற்றம்பலம்

மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்
நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்
பனையுள் இருந்த பருந்ததுபோல
நினையாதவர்க்கு இல்லை நின் இன்பந் தானே. 1

ஆற்றரு நோய்மிக்கு அவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத்தான் திருக் கோயில்கள் ஆனவை
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே. 2

போற்றிசைத்தும் புகழ்ந்தும் புனிதன் அடி
தேற்றுமின் என்றுஞ் சிவனடிக்கே செல்வம்
ஆற்றியது என்று மயலுற்ற சிந்தையை
மாற்றி நின்றார் வழி மன்னி நின்றானே. 3

யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் நகரமும் நல்திருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே. 5

அஞ்சுள ஆனை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத்து அங்குச மாவன
அஞ்சையும் கூடத் தடுக்க வல்லார்கட்கே
அஞ்சாதி யாதி அகம் புகலாமே. 6

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாருஞ் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே. 7

திருச்சிற்றம்பலம்

## பதினோராம் திருமுறை

**திருச்சிற்றம்பலம்**

இடர் களையாரேனும் எமக்கு இரங்காரேனும்
படரும் நெறி பணியாரேனும் - சுடர் உருவில்
என்பராக் கோலத் தெரியாடும் எம்மானார்க்கு
அன்பறாது என்னெஞ் சவர்க்கு. 1

காலனையும் வென்றோம் கடுநரகம் கைகழன்றோம்
மேலை இருவினையும் வேர் அறுத்தோம் கோல
அரணார் அவிந்தழிய வெந்தீ அம்பு எய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து. 2

குந்தி நடந்து குனிந்தொரு கை கோலூன்றி
நொந்து இருமி ஏங்கி நுரைத்தேறி - வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயா முன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லும் பொருளும் இருந்த மனையளவே
சொல்லும் அயலார் துடிப்பளவே - நல்ல
கிளை குளத்து நீரளவே கிற்றியே நெஞ்சே
வளை குளத்துள் ஈசனையே வாழ்த்து. 4

சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்
செப்ப நா அமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத்தேன்
கைதொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற்கு அன்பமைத்தேன்
மெய் அரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறணி ஈசற்கு
இவையான் விதித்தனவே.

**திருச்சிற்றம்பலம்**

## சேக்கிழார் சுவாமிகள் அருளிய

## பெரியபுராணம் 12ம் திருமுறை

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம். 1

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி! 2

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணினில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல்
உண்மையா மெனில் உலகர் முன் வருகென உரைப்பார். 4

வையநீடுக; மாமழை மன்னுக;
மெய்விரும்பிய அன்பர் விளங்குக;
சைவ நன்னெறிதாம் தழைத்து ஓங்குக
தெய்வ வெண்திருநீறு சிறக்கவே. 5

## மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற்று நல்ல மதிப்பெண் பெற பாராயணம் செய்ய வேண்டிய "சகலகலாவல்லி மாலை"

தமிழகத்தில் ஸ்ரீவைகுண்டம் எனும் இடத்தில் அவதரித்தவர் குமரகுருபர சுவாமிகள், ஐந்தாண்டு வரையில் ஊமையாயிருந்து, பிறகு திருச்செந்தூர் முருகன் அருளால் பேசும் ஆற்றல் பெற்றார். இவர் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினார். இவர் இயற்றிய நூல்கள் பலவாகும். இறைவர் திருவருளைப் பெறுதலே தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர் இவர்.

காசியில் தவம் இயற்ற வேண்டும் எனும் அவா மிகுதியால் காசிமாநகர் சென்றடைந்தார். அது சமயம் முஸ்லீம் மன்னர், பாதுஷா காசியை ஆண்டு வந்தார். அவருடைய உள்ளத்தைக் கவர்ந்து, அவரிடம், இடம் பெற்று, தவம் இயற்றத் தகுந்த மடம் ஒன்றினை நிறுவ எண்ணினார்.

இதன்பொருட்டு 'சகலகலாவல்லி மாலை' யென்னும் இப்பிரபந்தத்தை இயற்றி கலைமகளை வணங்கினார். இப்பாடல்களால் மனம் மகிழ்ந்த கலைமகளின் திருவருளால் எல்லா மொழிகளும் கைவரப் பெற்றார். பாதுஷாவின் மொழியிலேயே இருவரும் பேசி, பாதூஷாவை மகிழ்வித்தார். குமரகுருபர சுவாமிகளின் விருப்பப்படியே இடமும் உதவினார்.

இந்த பத்துப் பாடல்களையும் தினமும் மாணவர்களும், பெரியவர்களும் பாராயணம் செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும். இதனால் கல்வியில் உயர்ந்த நிலையை அடையலாம் என்பதில் சந்தேகமே வேண்டாம். இப் பாடல்களை விட வேறு எந்தப் பாடல்களாலும் கலைமகளின் அருளைப்பெற முடியாது என உணர்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடல்களைப் படித்து தேர்வில் முதல் இடம் பெற்றுத் திகழலாம். இத்தகைய பாடல்களை யெல்லாம் மறந்துவிட்டு நாம் இடர்ப்படுவது யாது காரணமோ? பரம்பொருளே அறியும்.

# பதிகம் 33

## சரஸ்வதி துதி

### சகலாவல்லி மாலை

வெண்தாமரைக்கன்றி நின்பதந்
    தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
    சகமேழும் அளித்து
உண்டான் உறங்க வொழித்தான்
    பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
    சகல கலா வல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
    தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
    பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே
    கனதனக் குன்றும் ஐம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
    சகல கலா வல்லியே. 2

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுது
    ஆர்ந்துன் அருட் கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடும்கொலோ
    உளம்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
    கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
    சகல கலா வல்லியே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
    கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்
    வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
    தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
    சகல கலா வல்லியே. 4

பஞ்சப்பு இதந்தரு செய்ய பொற்
    பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே
    நெடுந்தாட் கமலத்து
அஞ்சத்துவசம் உயர்ந்தோன்
    செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு ஒத்திருந்தாய்
    சகல கலா வல்லியே. 5

பண்ணும் பரதமும் கல்வியும்
    தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்த
    நல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும்
    கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
    சகல கலா வல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற்
    பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண்
    நல்காய் உளம்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால்
    அமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
    சகல கலா வல்லியே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமும் அவதானமும்
    கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய்
    நளினாசனம் சேர்
செல்விக்கு அரிதென்று ஒருகாலமும்
    சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
    சகல கலா வல்லியே. 8

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்
    ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
    நிலந்தோய் புழைக்கை
நற் குஞ்சரத்தின் பிடியோடு
    அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத் தாயே
    சகல கலா வல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
    மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
    படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி
    உண்டேனும் விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
    சகல கலா வல்லியே. 10

**திருச்சிற்றம்பலம்**

சுபம்! சுபம்! சுபம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிகம் 34

# பிறப்பும் இறப்பும் அற்றுப்போகவும் (மோட்சமடைய) தமிழ்வேதம் முழுவதும் ஓதிய பலனும் நல்கும் ஒப்பற்ற பதிகம்

திருஞான சம்பந்தப் பெருமானுடைய தந்தையார் சிவபாத இருதயர் தமது பூசைக் காலத்துத் தினமும் பிள்ளையாரது திருப்பதிகங்களை ஓதும் முறைமை உடையவராய் இருந்தார். நாளும் பதிகங்கள் பெருகிக்கொண்டே வந்ததால், சிவபாத இருதயர் முற்றும் ஓத இயலாது வருந்தமடைந்தார். இதை அறிந்த திருஞானசம்பந்தப் பெருமான் இத் ''திருவெழுகூற்றிருக்கை'' எனும் பதிகத்தை தம் தந்தையாருக்கு அருளி, இதனை ஓதின் எல்லாம் பதிகங்களையும் ஓதிய பலன் கிடைக்கும் என்றும் கூறியருளினார்.

எனவே, இப்பதிகத்தை ஓதினால் தமிழ் வேதத்தையே ஒருமுறை ஒதிய பலன் (தேவாரம் முழுவதும் ஓதிய பயன்) நிச்சயம் கிடைக்கும். அளவிலா புண்ணியம் பெறலாம். இப்பதிகம் ஓதும் வீடும் தூய்மை அடையும்.

### திருஞானசம்பந்தர் அருளிய திருஎழுகூற்றிருக்கை

### முதலாம் திருமுறை

**திருப்பிரமபுரம்** **பண் : வியாழக்குறிஞ்சி**

ஓர் உரு ஆயினை மானாங்காரத்து
ஈரியல் பாய் ஒரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத் தளித் தழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை
இருவரோடு ஒருவனாகி நின்றனை
ஓர் ஆல்நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழுதேத்திய நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை நாட்டம் மூன்றாகக் கோட்டினை
இருநதி அரவமோடு ஒரு மதி சூடினை
ஒருதாள் ஈர்அயில் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட்டு ஒருகரி ஈடழித்து உரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்புரத்தோடு நானிலம் அஞ்சக்
கொன்று தலத்துற அவுணரை அறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக்கரணம்
முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ஒருங்கிய மனத்தோடு
இருபிறப்பு ஓர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்து ஆறங்க முதலெழுத்தோதி
வரன்முறை பயின்றெழு வான்தனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதமுரலும் வேணுபுரம் விரும்பினை
இகலியமைந்துணர் புகலி அமர்ந்தனை
பொங்கு நாற்கடல் சூழ் வெங்குரு விளங்கினை
பாணி மூவுலகும் புதைய மேல்மிதந்த
தோணி புறத்து உறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தாராய் ஏய்ந்தனை
வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை எடுத்த இருதிறலரக்கன்
விறல் கெடுத்தருளினை புறவம்புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை
ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரும்
ஊழியும் உணராக் காழி யமர்ந்தனை
எச்சன் ஏழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறுபதமும் ஐந்தமர் கல்வியும்
மறை முதல் நான்கும்
மூன்று காலமும் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லை நீள்நிலத்தே
(முற்றிற்று)

**சிவா திருச்சிற்றம்பலம்**

**எல்லோரும் எல்லாமும் பெற்று வாழ்க வளமுடன்**
சுபம்! சுபம்! சுபம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் வாழ்வின் வழிகாட்டியாகத் திகழ்ந்து எம்மை எல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைபதம் எய்திய எங்கள் குடும்பத்தலைவர் அமரர் உயர் திரு வைத்திலிங்கம் கதிரேசு அவர்களின் மறைவு கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியவர் களுக்கும் உள்ளூரில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் தொலைபேசி மூலம் தேறுதல் தெரிவித்தவா களுக்கும் மலர் மாலை சூட்டியும் அஞ்சலி செலுத்திய வர்களுக்கும் இறுதி நிகழ்வில் பங்கு பற்றிப் பலவழிகளிலும் உதவி புரிந்த உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் சபிண்டீகரணத்திலும் பங்குபற்றியவர்களுக்கும் இம்மலரை சிறந்த முறையில் பதிப்பித்து உதவிய லட்சுமி அச்சகத்தினருக்கும் எமது நெஞ் சுகந்த நன்றியைத் தெரிவித்துகொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
**குடும்பத்தவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலமுறை கிளர்தல்

## கதிரேசு பொன்னம்மா தம்பதிகள்

### 1

கந்தசாமி
அன்னலட்சுமி
↓
மதிபாலன்
ருதாபாலன்
ஸ்ரீபாலன்
கஜபாலன்
செல்வபாலன்
சுதாகரன்
குணாநிதி

### 2

சரோஜினிதேவி
கந்தையா
↓
கேதீஸ்வரன்
பரமேஸ்வரன்
புவனேஸ்வரி
பரிமளாதேவி
நாகேஸ்வரி
சுதாகரன்
தர்சினி
விஜயகுமார்
தனுசியா
மகேந்திரன்

### 3

சாம்பசிவம்
சரோஜினிதேவி
↓
சோதிலிங்கம்
சிவகஜனி
கோகுலதாசன்
தனுசன்
விதுசன்

### 4

சிவபூரணி
இராசையா
↓
சிவஞானராசா
சிவனேஸ்வரி
சிவனேஸ்வரன்
சிவரஞ்சன்

### 5

லிங்காதேவி
ஞானசுந்தரம்
↓
மஞ்சுளா
கலைச்செல்வி
விக்னேஸ்வரன்
ஞானேஸ்வரன்
கலைமகள்
விஜயவாணி
ஜெகதீஸ்வரன்
கௌரீஸ்வரன்

### 6

சிதம்பரநடராசா
யோகம்மா
↓
சுகிர்தா
சுபாஜினி
யெயகவிதா
சிந்துஜா

### 7

இராசயோகபூபதி
மகாலட்சுமி
↓
சுனேனுகா
சுதர்சனா
வேனுகாயினி
தாரணி

### 8

வருணநாதன்
வரதாம்பிகை
↓
சற்சொரூபன்
கஜானன்
திரியம்பகி

### 9

நவபுஸ்பராணி
பாலசிங்கம்
↓
சுகபாணி
சுகர்ணா
பிரியா
ரமணன்
கீதாம்பரி

### 10

முருகபத்மராசா
சந்திரவதனி
↓
ஸ்ரீகரி
ஸ்ரீதாஸ்
ஸ்ரீராகவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது விணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது,
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்!

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by Luxmi Printer. Colombo - 13. Tel : 2448545